
உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

விதியை வெல்வது எப்படி?



திருவாவடுதுறை ஆதீனம்

ஓம் SRI SAI RAM

எல்லாம் வல்ல அருள்வல்லான்

திருவருளால்

அழைவன் 9.7.2001 அன்று

அமர்நாத் யாத்திரை

சென்று வந்ததின் நினைவுப் பரிசு

அன்புடன்

A.T.P. செந்தில்வேலன்

95) 0452
கடை 748935; வீடு 631605

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

விதியை வெல்வது எப்படி?

இது
திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனம்
23-ஆவது குரு மகாசன்னிதானம்
சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக
பரமாச்சார்ய சுவாமிகள் அவர்கள்
திருவுளப்பாங்கின் வண்ணம்
வெளியிடப்பெறுவது

திருவாவடுதுறை ஆதீனம்
2001

முதற் பதிப்பு : 1993
இரண்டாம் பதிப்பு : 1995
மூன்றாம் பதிப்பு : 1998
நான்காம் பதிப்பு : 2001

விலை ரூ. 15.00

ஸ்ரீநமசிவாயமூர்த்தி ஆஃப்செட் அச்சகம்,
திருவாவடுதுறை.

தொகுப்பாசிரியர்


''சித்தாந்த வித்தியா சாகரம்''
''செந்நெறிச் செல்வர்'', ''மெய்ஞ்ஞான வள்ளல்''
திரு. கு. வைத்தியநாதன்,
இயக்குநர்,
திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம், திருவிடைமருதூர்.

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணை
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

–அருள்திரு மாதவச் சிவஞான சுவாமிகள்.

5-1



ஆதீனம் குருமுதல்வர்

அருள்திரு

நமசிவாயமூர்த்திகள்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

உள்ளடக்கம்

சிவமயம்

பதிப்புரை

"ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்" என்னும் சமணர் கொள்கையைச் சைவ சமயம் ஏற்பதில்லை. வினையும் வினைப் பயனும் அறிவற்றவை. ஆதலால் அவை தாமாகவே செய்தவரைச் சென்று அடைய மாட்டா. அறிவுடைப் பொருளாகிய இறைவனே உயிர்கள் திருந்தி பக்குவம் அடையும் பொருட்டு வினைப்பயனை அவற்றிற்கு ஊட்டுகின்றான். வினைப்பயனே விதி என்று சொல்லப்படுவது.

திருஞானசம்பந்தப் பெருமான், திருக்கடைக் காப்புதோறும் ஊழ்வினையை வெல்வதற்கு உரிய வழிவகைகளை அருளிச் செய்துள்ளார்கள். **'வாதியா வினை மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம் வந்து அடையாவே"** என்பது திருவலஞ்சுழி திருப்பதிகத்தின் திருக்கடைக்காப்பு அருளும் செய்தியாகும். இந்த நூலில், மனிதருக்குள்ள எல்லாவகைத் துன்ப நீக்கத்திற்கும் அவர்கள் அடைய விரும்பும் நல்வாழ்விற்கும் திருமுறைகளின் வாயிலாக வழி வகைகள் கூறப்பட்டுள்ளன. நால்வர் பெருமக்கள் உலகு உய்ய அருளிச் செய்துள்ள பொருத்தமுடைய திருப்பதிகங்கள் தொகுத்து இந்நூலில் சேர்க்கப் பெற்றுள்ளன.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து இருபத்து மூன்றாவது குரு மகாசன்னிதானமாக ஞானபிடத்து எழுந்தருளிச் செந்தமிழ்ச் சிவநெறி வளர்ச்சிக்கும், சமுதாய நல்வாழ்விற்கும் அரும் பணிகள் பல ஆற்றிச் சிவஞானச் செங்கோல் செலுத்தும் **சீர்வளர்சீர்**

சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் மக்கள் நெறி அறிந்து வாழ்வாங்கு வாழ்ந்து நலம் பெற இவ்வகையில் திருப்பதிகங்கள் தொகுக்கப் பெற்று நூல் ஒன்று வெளிவருதல் வேண்டும் என்று திருவுள்ளம் கொண்டருளினார்கள். அவர்கள் திருவருளாணையின் வண்ணம் மெய்கண்ட சாத்திரங்களில் உயர் புலமையும் சோதிடக்கலை வல்லமையும் உடையவர்களும், ஆதீனத்துச் சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மைய இயக்குநருமாகிய 'சித்தாந்த வித்தியாசாகரம்', 'செந்நெறிச் செல்வர்', 'மெய்ஞ்ஞான வள்ளல்' திரு. **கு. வைத்தியநாதன்** அவர்கள் பதிகங்களைத் தொகுத்தளித்தார்கள். 31.1.1993ல் முதற் பதிப்பாக வெளியிடப்பெற்ற நூல், இரண்டாம் பாவத்திலும், பத்தாம் பாவத்திலும் ஒவ்வொரு பதிகம் அவர்கள் கருத்துப்படி சேர்க்கப்பெற்று இரண்டாம் பதிப்பாக 1995ல் வெளிவந்து, 1998ல் மூன்றாம் பதிப்பாகவும் வெளிவந்தது. தற்சமயம் நான்காம் பதிப்பாக வெளிவருகிறது. தொகுப்பாசிரியர் அவர்களுக்கு அருள்திரு நமசிவாயமூர்த்திகள் பேரருள் துணைநின்று நலன்கள் எல்லாம் பயப்பதாக.

சீருவளர்சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம் நான்காம் பதிப்பாக வெளிவரும் "**விதியை வெல்வது எப்படி?**" என்னும் இந்நூலினைச் செந்தமிழுலகு பெற்று நியமமாகப் பாராயணம் செய்து பயன்கொண்டு இன்புற விரும்புகிறோம்.

—**திருவாவடுதுறை ஆதீனம்.**

உ

சிவமயம்

முதலில் இதனைப் படியுங்கள்

''சொல்லிய அருந்தமிழ் பத்தும் வல்லவர்
அல்லலோடு அருவினை அறுதல் ஆணையே'' (3.15.11)
– திருஞானசம்பந்தர்.

தோற்றுவாய்:

உலகில் உள்ள ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு வகைத் துன்பத்தை அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். துன்பமோ, துயரமோ, தொல்லையோ சிறிதும் இல்லாதவர் எவரும் இலர். துன்பங்கள் நம்மை ஏன் தொடர்கின்றன? துன்பங்கள் நமக்கு எப்படி ஏற்படுகின்றன? என்பனவற்றைத் துன்புறுபவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை. ஆனால் துன்பத்தைத் தாங்க இயலாமையால், அதனைப் போக்குவதற்கான வழிமுறைகளைத் தேடி அலைகிறார்கள்.

சோதிட நம்பிக்கை:

அவ்வாறு தேடி அலைபவர்களில் பெரும்பாலோர் சோதிட நிபுணர்களைக் கண்டு, தமக்கு எப்போது இந்தத் துயர் நீங்கும் என்னும் தடையை எழுப்பிப் பெரும் பொருள் கொடுத்துச் சோதிடரின் விடைக்காகக் காத்துத் தவம் கிடக்கிறார்கள். சோதிடர்கள் கூறும் வெற்றுரைகளுக்குப் பெருமதிப்புக் கொடுத்துப் ''பரிகாரம்'' என்னும் பெயரால், பகுத்தறிவுக்கு ஒவ்வாதன பலவற்றைச் செய்து, பொருளையும் காலத்தையும் வீண் விரயம் செய்கிறார்கள். சோதிடர் கூறும் பரிகாரம் தமது துயரை நீக்குமா என்பதைக் குறித்துச் சிறிதேனும் அவர்கள் சிந்திப்பதில்லை.

சோதிடர்கள் எப்படிப் பலன் கூறுகிறார்கள்? நாம் பிறந்த போது நவக்கிரகங்கள் நிற்கும் இடத்தைப் பார்த்துச் சோதிட

நூல்களில் கூறப்பட்டுள்ள விதிகளை அனுசரித்துச் சோதிடர்கள் பலன் சொல்கிறுர்கள். அவற்றுள் சில பலிதமாகும்; பல பலிதம் ஆகாமல் போகும். சோதிடர்களின் வாக்குகளில் இருக்கும் நம்பிக்கை, இறைவனிடத்திலும் இறை அடியார்களின் அருள் வாக்குகளிலும் நம்மில் பலருக்கு இல்லை என்பது எனது அனுபவத்திற் கண்டது. எனவேதான், நம்மில் பெரும் பாலோர்க்குச் சோதிடர்கள் கூறிய பரிகாரங்களைச் செய்து முடித்த பிறகும் துயர்கள் நீங்கப் பெருமல் தொடர்ந்த வண்ணம் உள்ளன. பலன் சொல்லும் சோதிடர்களில், இறைப்பற்று உடையவர்கள் கூறும் பலன்களே பலிதமாகின்றன என்பதைப் பலர் அறியாமலிருக்கின்றனர்.

நவக்கிரகங்களைப் பற்றிச் சில:

நவக்கிரகங்கள் நமது வாழ்வை எந்த அளவு பாதிக்கின்றன என்பதை, நாம் ஓரளவு புரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான், நமது துயரைத் துடைப்பதற்கு எந்த வழியைப் பின்பற்றினுல், அது பயனுள்ளதாக இருக்கும் என்பதில் நமக்குத் தெளிவு ஏற்படும்.

நவக்கிரகங்கள் இறைவனின் ஏவலர்கள். இறைவன் வகுத்துள்ள சட்டப்படி, பிராரத்துவம் எனப்படும் வினைப்பயன் ஆகிய விதியை, நாம் அனுபவிக்கும்படி செய்வார்கள். இறைவனுல் வகுக்கப்பட்ட, சட்டங்களின் விதிகளில் ஏதேனும் ஒன்றைக் கூட்டியோ, குறைத்தோ, மாற்றியோ பலனைக் கொடுக்க நவக்கிரகங்களால் இயலாது என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். அரசு விதித்துள்ள சட்ட திட்டங்களுக்கு ஏற்பவே அரசு ஊழியர்கள் எதையும் செய்ய முடியும் அல்லவா? அதைப் போன்று நவக்கிரகங்களும் தமது விருப்பப்படி எந்த வினைப்பயனையும் யாருக்கும், நியதிக்கு மாருகச் செய்ய முடியாது. நவக்கிரகங்களுக்கு அதற்குரிய உரிமை வழங்கப் பெறவில்லை.

சோதிட நூல்கள், நவக்கிரகங்கள் நமது சாதகத்தில் நிற்கும் நிலைக்கு ஏற்ப, நமக்குள்ள விதி எப்படிப் பட்டது என்பதைக் கூறமுடியுமே அன்றி, நமது ஏழ்மைப் போக்கு வதற்கான வழி வகைகளைக் கூறுவதில்லை. 'பரிகாரம்' என்ற பெயரில், கூறப்படுவனவெல்லாம், பிழைப்பு கருதிப் பேசப்படுவனவே அன்றிச் சோதிடச் சுவடிகளில், அதற்குப் பிரமாணம் இல்லை என்பதைச் சிறந்த சோதிட நிபுணர்கள் அறிவார்கள். எனவே, சனீசுவரனுக்கு எள்ளுப் பொட்டலம் போடுதல், செவ்வாய்க்குச் செவ்வரளி மாலை போடுதல், இராகு கால வெள்ளிக் கிழமைகளில் இராகுக்கு வழிபாடு செய்தல் போன்ற நவக்கிரக சாந்திகள் எனக் கூறப்படுவன அனைத்தும் நமக்கு ஏற்பட்ட ஊழ்வினைத் தொல்லைகளிலிருந்து, நம்மைக் காக்கமாட்டா என்பதை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். அப்படியானால் ஊழ்வினைத்துயரை நீக்குவதுதான் எப்படி?

நமக்கு ஏற்பட்ட விதியின் வரலாறு:

காலம் என்னும் தத்துவம் தோன்றுவதற்கு முன்பு நாம் எப்படி இருந்தோம் என்பதைச் சற்றுச் சிந்திக்க வேண்டும். கடிகாரம் தோன்றுவதற்கு முன்பு நம் முன்னோர்கள் சூரியனின் நிலையைக் கொண்டு காலத்தைக் கணக்கிட்டு அறிந்து வந்தார்கள். இந்தச் சூரியனும் தோன்றுவதற்கு முன்பு எங்கும் இருள் சூழ்ந்திருக்க வேண்டும் அல்லவா? அத்தகைய கொடிய இருளில், நாம் அனைவரும் அறியாமை வயப்பட்டுக் கிடந்திருக்கிறோம். அந்நிலையில் இறைவன் நம்மீது இரக்கம் கொண்டு, நமக்கு உருவமற்ற ஒரு நுண்ணுடல் எல்லா உயிர்களுக்கும் ஒரே மாதிரியானதாக வழங்கப்பட்டது. அதனாலேயே,

''பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்''

என்று திருவள்ளுவர் கூறினார்.

அந்த நுண்ணுடலைப் பெற்றதும், நமது அறியாமை சிறிதளவு நீங்கியது. அப்போது, நமது விருப்பு வெறுப்புக்கள் வெளிப்படலாயின. நமது விருப்பு வெறுப்புக்களுக்கு இசைந்த அளவில், ஒவ்வொரு உயிருக்கும் வெவ்வேறு விதமான பருவுடல்களை இறைவன் வழங்கினான். முதல் பருவுடலைப் பெற்றதே நமக்கு ஏற்பட்ட முதல் பிறப்பு ஆகும்.

அந்த முதல் பருவுடலில் இருந்து நாம் செய்த நல் வினைகளும் தீவினைகளும், அடுத்த பிறப்பில் நமக்கு இன்பங் களையும் துன்பங்களையும் தந்தன. நல்வினைக்குப் பயன் இன்பம். தீவினைக்குப் பயன் துன்பம். இந்த வினைகளை நமது அறிவின் நிலைக்கு ஏற்ப நமது விருப்பப்படியே நாம் செய்கிறோம். நமது விருப்பப்படி நாம் செய்யும் செயல்களில் யாரும் தலையிடுவதை நாம் விரும்புவதில்லை. எனவே ஒவ்வொரு பிறப்பிலும் நாம் வினைகளைச் செய்து குவிக்கிறோம். அந்த வினைக்குவியலைச் ''சஞ்சிதம்'' என்று கூறுவர்.

அடுத்து அடுத்து வரும் பிறப்புக்களில் இறைவன் அந்த வினைக் குவியலிலிருந்து ஒரு பகுதியை எடுத்து நாம் திருந்தும் அளவுக்கு நமக்குப் பயனாக ஊட்டுகிறான். இந்த வினைப் பயனே ''ஊழ்'' அல்லது ''விதி'' எனப்படுகிறது. இதுவே நமக்கு ஏற்பட்ட விதியின் வரலாறு ஆகும்.

வினைப்பயனை இறைவன் ஊட்டுதற்குக் காரணம்:

ஒவ்வொரு பிறப்பிலும் நமக்கு ஏற்படும் இன்பங்களை நாம் மகிழ்வுடன் அனுபவிக்கிறோம்; துன்பங்களை அனுபவிக்க நாம் விரும்புவதில்லை. இன்ப விளைவுக்குக் காரணமான நல்வினைகளும் துன்ப விளைவுக்குக் காரணமான தீவினைகளும் நாம் செய்தவைதாமே என்னும் தெளிவு நம்மில் பலர்க்கு இல்லை.

இன்பங்களையும் துன்பங்களையும் இறைவன் மாற்றி மாற்றி நமக்கு ஊட்டுகிறான். இவற்றை நாம் அனுபவிக்கும்போது, நமது

அறிவு தெளிவடைகிறது. நமது துன்பங்களுக்குக் காரணம் நாம் செய்த தீவினைகளே என்னும் அறிவுத் தெளிவு நமக்கு ஏற்படுகிறது. எனவே தீவினை செய்வதற்கு நமக்கு அச்சம் உண்டாகிறது; அதனுல் ஒரு வகைத் திருத்தம் ஏற்படுகிறது. நமக்குள்ள சுயநலம் காரணமாகப் பிறர்க்குத் தீமை செய்யக்கூடாது என்னும் தெளிவு பிறக்கிறது. இத்தெளிவு, பல்வேறு பிறப்புக்களில் நமக்கு ஏற்பட்ட அனுபவம் காரணமாக உண்டாகிறது. இறைவன் நமக்கு வினைப்பயனை ஊட்டுதற்குக் காரணம் நமது தவறுகளை நாமே உணர்ந்து வருந்தித் திருந்தும் பொருட்டே ஆகும் என்பதைத் தெளிவாக நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

எந்த ஒரு தந்தையும் தன் மகன், துன்புற வேண்டும் என்று விரும்புவதில்லை, ஆயினும் தன் மகன் தவறு செய்வதிலிருந்து திருந்தவேண்டும் என்று விரும்புவது இயல்பு. அதன் பொருட்டுத் தன் மகன் தாங்கும் அளவுக்குச் சிறிய தண்டனைகளைத் தந்தை வழங்குவான். அவ்வாறே உலகில் உள்ள எல்லா உயிர்களுக்கும் தந்தையாக இருக்கும் இறைவன், நாம் துன்புறவேண்டும் என்னும் நோக்கம் உடையவனுக இல்லை என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். நாம் திருந்தவேண்டும் என்னும் நோக்கத்திலேயே, நாம் தாங்கும் அளவுக்கு இறைவன் சில தண்டனைகளை நமக்கு வழங்குகிறுன். அவ்வளவே.

இன்பமும் துன்பமும்:

நாம் அனைவரும் இன்பத்தை இருகரம் நீட்டி வரவேற்கிறோம். எனவே எல்லோரும் இன்பத்தையே விரும்புகிறார்கள் என்பது தெளிவாகிறது; துன்பத்தை எவரும் விரும்பவில்லையாகலின், பிறர்க்குத் துன்பம் தரும் எந்த ஒரு செயலையும் நாம் செய்யக்கூடாது என்பது இறைச்சட்டமாக இருக்கிறது.

நம்மைச் சார்ந்து வாழும் நமது உற்ருர், உறவினர்கள் நண்பர்கள் மட்டும் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்னும் எண்ணத்தில், பிறர்க்கு நாம் பலவகைகளில் துன்பம் செய்து கொண்டு இருக்கிறேம். அத்துன்பங்களே நாம் நேரடியாகச் செய்யாவிட்டாலும், மறைமுகமாகவாவது செய்கிறேம். அறிந்து செய்தாலும், அறியாமல் செய்தாலும், தீவினை தீவினையே. அத் தீவினைகளுக்கும் பயனுண்டு. மறைமுகமாகச் செய்யும் தீவினைகளில் பெரும்பாலானவை சமூகத்திற்கும் நாட்டுக்கும் செய்யும் கேடுகளே ஆகும். எனவே, நமது பொறுப்பை உணர்ந்து எதைச் செய்தால், யாருக்கும் எந்தத் தீங்கும் நேராமல் இருக்கும் என்பதை எண்ணிப்பார்த்து நமது செயல்களைச் செய்ய வேண்டும்.

நாம் செய்யும் தீவினைக்குரிய பயன்களாகிய துன்பங்களை, நாம் திருந்தும் பொருட்டு இந்தப் பிறப்பிலும் இறைவன் அனுபவிக்குமாறு செய்வான்; மறுபிறப்பிலும் அனுபவிக்குமாறு செய்வான். நாம் செய்யும் கொடிய தீவினைகளுக்குரிய பயன்களை, பல்வேறு பிறப்புக்களில் ஊட்டிஊட்டி, இறைவன் நம்மைத் திருத்துகிறுன்.

எவ்வளவு தீவினைகளை நாம் செய்திருக்கிறேமோ அவ்வளவு துன்பங்களையும் நாம் அனுபவித்தே தீர்க்க வேண்டும் என்பது இறைவன் நோக்கம் அன்று, நமக்கு வழங்கப்பட்ட இந்தப் பிறப்பிலேயே, நமது தவறுகளுக்காக வருந்தி, மேற்கொண்டு எந்தத் தீவினையையும் செய்யக்கூடாது என்ற உறுதிப்பாட்டுடன் திருந்தி வாழ்க்கையை, நாம் மேற்கொள்வோம் ஆயின், நமக்கு துன்பம் ஊட்டுவதைச் சிறிது சிறிதாகக் குறைத்து இறைவன் நமக்கு நாம் எதிர்பாராத வகையில், நாம் செய்த நல்வினைப் பயனுகிய இன்பத்தை மிகுதியாக வழங்குவான்.

நமக்கு ஏற்படும் இன்ப துன்பங்களின் தன்மையை இந்த முறையில் நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

துன்பங்களிலிருந்து விடுபடுவது எப்படி?

பல சந்தர்ப்பங்களில் நாம் செய்யும் தவறுகள் நமக்குத் தெரிகின்றன. ஆயினும், எனக்கு ஏற்பட்ட சூழ்நிலையில் இதை நான் செய்தேன் என்று நமது மனோசாட்சியைத் திருப்திபடுத்தி விடுகிறோம். இன்னும் சொல்லப்போனால், நாம் செய்யும் தவறுகளுக்குக் காரணம் கண்டுபிடித்து, நம்மையும் பிறரையும் ஏமாற்றிக்கொண்டு இருக்கிறோம்.

திருந்தவேண்டும் என்னும் எண்ணம் அடிக்கடி நமக்கு ஏற்படும். ஆனால், திருந்துவதற்கான வழி தெரியாமையால் திருத்தம் பெறுமல் திரும்பத் திரும்பத் தவறுகளைச் செய்து கொண்டே இருக்கிறோம். அவற்றின் பயனாகிய துன்பங்களையும் அனுபவித்துக் கொண்டும் இருக்கிறோம். நமக்கு ஏற்படுகின்ற இந்த நிலைகளையெல்லாம் இறைவன் நன்றாக அறிந்து வைத்தே இருக்கிறான்.

திருந்த விரும்பும் ஒவ்வொருவரும், துன்பங்களிலிருந்து விடுபடுதற்கு விரும்பும் ஒவ்வொருவரும், திருந்தி மகிழ்ச்சியாக வாழும் பொருட்டே இறைவன் அருளாளர்களை இப்பூவுலகிற்கு அனுப்பி, அவர்களைக் கொண்டு அருள்வாக்குகளை வழங்கச் செய்திருக்கிறான். அந்த அருள் வாக்குகள், நமது அறியாமையைப் போக்கி, நம்மைத் தீவினைகள் செய்வதிலிருந்து காப்பாற்றி, நம்மைச் சிறிது சிறிதாக திருந்தச் செய்கின்றன. கொலைகாரர்களும் குணங்கெட்டவர்களும்கூட, அந்த அருள் வாக்குகளைப் பாராயணம் செய்வார்களாயின், நல்லவர்களாகி விடுவார்கள். இவ்வுண்மையைச் சம்பந்தப் பெருமான் அருளிச் செய்த,

> ''கொல்வாரேனும்குணம் பல நன்மைகள்
> இல்லாரேனும் இயம்புவர் ஆயிடின்
> எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால்
> நல்லார் நாமம் நமச்சி வாயவே''

என்னும் திருவாக்கு மெய்ப்படுத்துகின்றது.

சிலர், வாழ்நாளின் பெரும்பகுதியைக் கழித்துவிட்டதால் இனித் தமக்கு எந்தவிதக் கழுவாயும் இல்லை என்று நினைத்து, அறுபது வயது ஆன பின்னர், தமக்கு உற்ற துன்பத்தை அனுபவித்தே ஆகவேண்டும் என்று வெதும்பிய உள்ளத்தோடு, நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையில் உள்ளவர்களும், அருளாளர்களின் திருவாக்குகள் ஆகிய திரு முறைகளைப் பாராயணம் செய்வாராயின் அவர்களுக்கும் துன்ப நீக்கம் ஏற்படும். இவ்வுண்மையை

''பாலனாய்க் கழிந்த நாளும், பனிமலர்க் கோதைமார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும், மெலிவோடு மூப்புவந்து
கோலனாய்க் கழிந்த நாளும் குறிக்கோள் இலாது கெட்டேன்
சேலுலாம் பழனவேலித் திருக்கொண்டீச் சரத்துளானே''

என்னும் அப்பர் அருள்வாக்கு தெளிவுபடுத்துகின்றது. எனவே, எந்த வயதினரும் தம் தவறுகளுக்காக வருந்தித் திருந்தினால், நிச்சயம் இறைவனால் மன்னிக்கப்படுவார்கள் என்பது உண்மை.

தவறுகள் செய்வது தவிர்க்கமுடியாததாக இருக்கலாம். திருந்துவதற்கு முயற்சி செய்வது தவிர்க்க முடியாதது அல்லவே? என்ன தவறுகளைச் செய்தாலும், அதற்காக வருந்தி மீண்டும் தவறு செய்யாமல் இருந்தால் போதும் திருத்தம் ஏற்படும்.

இவ்வுண்மையைத் தெளிவுபடுத்தியே, திருவள்ளுவர்

''எற்று என்று இரங்குவ செய்யற்க; செய்வானேல்
மற்றுஅன்ன செய்யாமை நன்று'' **(655)**

என்று ''வினைத்தூய்மை'' என்னும் அதிகாரத்தில் அருளிச் செய்திருப்பதைக் கருத்தில் இருத்திக் கொள்ளல் வேண்டும்.

(எற்றென்று – இந்தமாதிரித் தவறு செய்து விட்டேனே என்று)

திருமுறைகள் ஓதுவதன் பயன்:

எத்தனைதான் திருந்தவேண்டும் என்று நாமாக விரும்பினாலும், நமக்குள்ள அறியாமை காரணமாக, திரும்பத் திரும்பத் தவறுகளை நாம் செய்துகொண்டுதான் இருக்கிறோம். இந்த அறியாமையிலிருந்து நம்மை நாம் காத்துக் கொள்வதற்குத் திருமுறை வாக்குகள் பெரிதும் துணை செய்கின்றன.

இறைவன், வினைவயப்பட்டுத் துன்பப்படும் நாம் அனைவரும், திருந்தி உய்யும் பொருட்டு, அருளாளர்களை இப்பூவுலகிற்கு அனுப்பி, அவர்கள் வாயிலாக நமக்குத் தன் அருளிப்பாடுகளைச் செய்துள்ளான். அருளாளர்களை அதிட்டித்து நின்று, இறைவனே திருவாய் மலர்ந்து அருளிய சொற்களே திருமுறைகளில் உள்ளன. இவ்வுண்மையை ''எனது உரை தனது உரையாக'' என்று அருளிச் செய்துள்ள சம்பந்தப் பெருமான் திருவாக்கிலிருந்து அறியலாம். திருமுறைகளில் உள்ள ஒவ்வொரு 'சொல்லும்' மந்திர ஆற்றலை உடையது. எனவே, திருமுறைகளை நாம் பாராயணம் செய்யும் போது, அதில் உள்ள மந்திர ஆற்றல், நமது உயிரில் கலந்து, நமது அறியாமையை போக்கும் திறன் உடையது.

திருமுறைகளை ஓதி, ஊழ்வலியிலிருந்து நாம் விடுபட்டு, பிறவிப்பயனைப் பெறும் பொருட்டே திருமுறைகளை இறைவன் நமக்கு வழங்கியுள்ளான். திருமுறைகளை இறைவன் தோற்றுவித்ததன் நோக்கம் இதுவே ஆகும். இவ்வுண்மையைச் சம்பந்தப் பெருமான் திருக்கடைக்காப்பில் உள்ள திருவாக்குகளிலிருந்து நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

''நறுநீர் உகும் காழி ஞானசம்பந்தன்
வெறிநீர்த் திருப் பறியல் வீரட்டத்தானை
பொறிநீடு அரவன், புனைபாடல் வல்லார்க்கு
அறும்நீடு அவலம்; அறும், பிறப்புத்தானே'' **(1–134–11)**

என்னும் திருக்கடைக்காப்பு இவ்வுண்மையை வலியுறுத்து கின்றது.

(நீடு அவலம் – நீண்ட நாட்களாக இருக்கும் துன்பம்; அறும் – நீங்கும்).

திருமுறைகளைத் தவிர, நாம் நமது துன்பங்களிலிருந்து விடுபடுவதற்கு வேறு எந்த உபாயமும் இல்லை. நாம் திருந்தி வாழ்வதற்குத் திருமுறைகளே பெரிதும் உதவுகின்றன.

திருமுறைகளில் உள்ள சொற்களில் உள்ள மந்திர ஆற்றல், நம்மை அறியாமலேயே நமக்கு வரவுள்ள துன்பங்களைப் போக்கி, இன்பங்களை விளைவிக்கும் என்பதில் எள்ளளவுத்துணை ஐயப்பாட்டிற்கு இடம் இல்லை. இந்த மந்திர ஆற்றல் இறையாற்றல் ஆகும். அவற்றோடு நாம் நாள்தோறும் தொடர்பு கொள்ளும்போது அந்த இறையாற்றல் நம்மைத் திருத்துகின்றது. நம்மை அறியாமலே நாம் திருந்திக் கொண்டிருப்போம். திருந்திய மனிதனுக்கு வினைப்பயனை ஊட்டத் தேவை இல்லாததால் நாளடைவில், விதியை மாற்றும் வல்லமையும் திருமுறைப் படனம், நமக்குச் செய்து உதவுகிறது. எனவே, திருமுறைகளைப் படனம் (பாராயணம்) செய்பவர்கள் விதியை வெல்லமுடியும்.

எனது அனுபவம்:

இருபது ஆண்டுகளுக்கு மேலாக எனக்குச் சோதிட நூல்களோடு பயிற்சி உண்டு. என்னிடம் சோதிடம் பார்க்க வருபவர்களுக்குப் பரிகாரமாகத் திருமுறைகளில் கயிறு சார்த்திப் பார்த்து, திருவருளால் கிடைக்கும் அப்பதிகத்தைப் படனம் செய்து வரும்படி கூறுவேன். எதிர்பார்த்த கால எல்லைக்கு முன்பே, பயன் ஏற்பட்டு வந்தது. அந்த நிகழ்ச்சிகளையெல்லாம் இங்குக் கூறுவதற்குக் காலமும் இடமும் போதா. கணக்கி லடங்காத பல பயன்கள் ஏற்பட்டிருக்கின்றன. எனது அனுபவ வாயிலாகப் பெற்ற இவ்வுண்மையைத் தமிழ் அறிந்த இறைப்

பற்றுடைய அனைவர்க்கும் பயன்பட வேண்டும் என்னும் நோக்கத்திலேயே இந்நூல் வெளியிடப்படுகிறது. நீங்களும் இந்நூலில் கூறியவாறு திருமுறைகளைப் படனம் செய்து, கோரிய பயன்களைப் பெறுவதற்கு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் முன்னின்று உதவும் என நம்புகிறேன்.

திருமுறைகளைப் படனம் செய்வதற்கும் விதிவேண்டுமா?

''எதற்கும் ஒரு விதிவேண்டும். திருமுறைகளைப் படனம் செய்வதற்கும் விதி இருந்தால்தான் செய்ய முடியும்'' என்று ஒரு சிலர் என்னிடம் நேரில் கூறினர். இது ஒருவகையான நழுவல் பேச்சு ஆகும். விதிவேறு, முயற்சி வேறு. முயற்சி செய்வதற்கும் விதி வேண்டும் என்று கூறுவது பொருந்துமா?

'விதி' என்பது இந்தப் பிறப்பில் நமக்கு ஏற்பட்டிருக்கும் ஒருவகைச் சூழ்நிலையே ஆகும். 'முயற்சி' என்பது, அந்தச் சூழ்நிலையில் இருந்துகொண்டே, அதனைப் பொருட்படுத்தாமல் முயன்று முயன்று முன்னேறுவது ஆகும். அந்நிலையில் அத்தகைய சூழ்நிலையிலிருந்து விடுபடுவது அனுபவ உண்மை.

விதிப்படி ஒருவனுக்கு ஒரு சூழ்நிலை அமைகிறது. அவ்வாறு அமைந்த சூழ்நிலையைக் குறித்து, உலகத்தில் யாரும் அவனைக் குறை கூற மாட்டார்கள். அஃது அவன் தலை எழுத்து என்று அமைதிகொள்வர். ஆனால், அந்தச் சூழ்நிலையையே, தனக்குச் சாதகமாகக் கொண்டு, மேற்கொண்டு எந்த முயற்சியும் மேற்கொள்ளாமல், அவன் வாளா இருப்பானாகில், உலகத்தில் ''இவனது சோம்பேறித்தனமே, இந்த இழிநிலைக்குக் காரணம்'' என்று அவனைப் பழிப்பார்கள். எனவே முயற்சி செய்ய வேண்டுவது இன்றியமையாததாகும், இவ்வுண்மையைத் தெளிவுபடுத்தித் திருவள்ளுவர்,

''பொறியின்மை யார்க்கும் பழியன்று; அறிவு அறிந்து
ஆள்வினை இன்மை பழி''

என்று அருளிச் செய்வாராயினர்.

இதிலிருந்து திருமுறைகளைப் படனம் செய்து திருந்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கும் ஒரு விதி வேண்டும் என்று கூறுவது முற்றிலும் பொருந்தாது என்பது பெறப்படும்.

இந்தத் திருக்குறளில் வரும் ''அறிவு அறிந்து'' என்னும் தொடருக்கு ''அறிய வேண்டுமவற்றை அறிந்து '' என்று பரிமேலழகர் உரை கூறுகிறார். அறிய வேண்டுவன யாவை? ''நமக்கு விதியை வகுத்து ஊட்டுபவன் இறைவன். இறைவன் அருளால் நமக்குக் கிடைக்கப்பெற்ற திருமுறைகளைப் படனம் செய்வதால், நமக்குத் திருத்தம் ஏற்படும். அந்தத் திருத்தம் காரணமாக, மேலும் விதியை ஊட்டுவதை இறைவன், சிறிது சிறிதாகக் குறைத்து, அறவே நிறுத்திவிடுவான்'' என்பனவே, நாம் அறியவேண்டுவன ஆகும். எனவே, திருமுறைப்படனம் நிச்சயம் நமது விதியை மாற்றி, நமது துன்பங்களைப் போக்கி, நம்மை நிம்மதியாக வாழச்செய்யும் என்பது உண்மை.

விதியையாவது வெல்வதாவது?

''விதியையாவது வெல்வதாவது? அதெல்லாம் வெட்டிப் பேச்சு; செய்த வினைக்குரிய பயனை, உடலோடு உலகில் இருக்கும் வரை அனுபவித்தே தீர்க்கவேண்டும்; விதி யாரை விட்டது?'' என்று பெரும்பாலோர் கூறிக்கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு கூறுவது பொருத்தமற்ற வாதம் மட்டுமன்று; பொறுப்பற்ற பேச்சும் ஆகும்.

உறுதியான நம்பிக்கையுடன், உள்ளம் உருகித் திருமுறைகளைப் படனம் செய்து வருவோமாயின், நிச்சயம் இறைவன் நமக்கு ஊட்டும் வினைப்பயனை, நமது உறைப்புக்கு

ஏற்ப, சிறிது சிறிதாகக் குறைத்து, நமது உறைப்பு வலுப்பெற்று நிற்கும்போது, அறவே நீக்கிவிடுவான். இதற்குக் காரணம், திருமுறைப் படனம் வாயிலாக, நாம் திருத்தம் பெற்று விடுவதுதான். திருந்திய பிறகு, வினைப்பயனை ஊட்டவேண்டிய அவசியம் இல்லை; அதன்பின்பும் விதியை, நாம் அனுபவித்துத் தான் ஆகவேண்டும் என்று கூறினால் இறைவன் கருணையற்றவன் என்று கூறவேண்டிவரும்.

கைதி ஒருவன், பதினான்கு ஆண்டுகள் ஆயுள் தண்டனை அனுபவிக்கவேண்டும் என்பது விதி. நீதிமன்றம் அவனுக்கு விதித்த தண்டனையை, அவன் அனுபவித்து வரும் காலத்தில், தன் தவறுக்காக வருந்தி, அவன் திருந்திய வாழ்வைச் சிறையிலேயே நடத்தி வந்தான். தண்டனைத் தவிர்ப்பு விதிகளின்படி (under the provision of permission) அவனுக்குப் பதினான்கு ஆண்டுகளாக விதிக்கப்பட்ட ''விதி'' மாற்றப்பட்டு ஏழு ஆண்டுகளில் சிறையிலிருந்து அவன் விடுதலை செய்யப்படுகிறான். இஃது இன்றும் நடைமுறையில் உள்ளது.

மனிதரால் செய்யப்பட்ட சட்டமே இவ்வளவு கருணை உடையதாக இருக்கும்போது, கருணையே வடிவாகிய கடவுளின் சட்டம் எவ்வளவு இரக்கம் உள்ளதாக இருக்கும் என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். எனவே, வினைப்பயன் ஆகிய விதியை, அதனால் ஏற்படும் துன்பத்தை வாழ்நாள் முழுவதும் நாம் அனுபவித்தே தீரவேண்டும் என்று கூறுவது பொருந்தாது.

இறை வழிபாட்டினால் ஊழின் கடுமையை வேண்டு மானால் சற்றுக் குறைத்துக் கொள்ளலாமே தவிர, விதியை முழுமையாக மாற்ற முடியாது என்று சிலர் கருதுகிறார்கள். நாம் திருந்திய பிறகும், நாம் அனுபவித்துக் கொண்டிருப்பது ஊழ்வலியா, திருவருள் உதவியா என்பதை அறியாமல், இவ்வாறு கூறுவதும் பொருந்தாது. ஊழ் வலிமிக்கது என்று திருவள்ளுவர் கூறியிருக்கிறாரே அன்றி ஊழை வெல்லமுடியாது என்று அவர் எந்த இடத்திலும் கூறவில்லை.

''ஊழின் பெருவலி யாவுள? மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்'' **(380)**

என்னும் திருக்குறள் ஊழின் வன்மையையே கூறுகிறது. ஊழை வெல்ல முடியாது என்று கூறவில்லை.

''ஊழையும் உப்பக்கம் காண்பர், உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்'' **(620)**

என்னும் திருக்குறளில், விடாது முயல்பவர், தொய்வு இன்றி முயல்பவர் ஊழைப் புறமுதுகிட்டுஓடும்படி செய்வர் என்று தெளிவாகக் கூறியுள்ளார். இக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர்,

''ஊழ் ஒருகாலாக இருகாலாக அல்லது, விலக்
காமையின், பலகால் முயல்வார் பயன் எய்துவர்''

என்று கூறியிருப்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

திருமுறைப் படனம் செய்த சில நாட்களில் துன்பம் நீங்கவில்லையே என்று சோர்வு அடைந்துவிடலாகாது. பல நாட்கள் தொடர்ந்து படனம் செய்ய வேண்டும் – என்பது இக்குறள் வாயிலாக நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

எனவே, திருமுறைகளைப் படனம் செய்து நமது வினைத் துன்பத்தை நாம் போக்கிக் கொள்ளலாம் என்பதும் அப்படனத்தை நாம் விடாமல் தொடரவேண்டும் என்பதும் இதனுல் பெறப்பட்டது. நமது உள்ளம் படனத்தில் தோய்ந்து இருக்கும் அளவுக்கு, பயன் கூடிவரும்.

இந்நூலில் எடுத்தாளப்படும் பதிகங்களைப் பற்றி:

ஒவ்வொருவருடைய ஜாதகத்திலும் பன்னிரண்டு கட்டங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கட்டமும் நமது வாழ்வில் நாம் அனுபவிக்க இருக்கும் பல்வேறு இன்ப துன்ப விளைவுகளைக் குறிக்கும். இதனை பாவம் (Bhavam) என்று சோதிட நூலார் கூறுவர். ஜாதகத்தில் ''ல'' என்று போடப்பட்டிருக்கும் கட்டம் முதல் பாவம் (First Bhavam) ஆகும். அதிலிருந்து இரண்டு, மூன்று என்று பன்னிரண்டு பாவங்கள் (Bhavas) வரை உள்ளன.

இவற்றுள் ஒவ்வொரு பாவத்திற்கும் இன்னின்ன பலன்கள் என்று உள்ளன. அந்தப் பலன்களை, சோதிட சாத்திர அடிப்படையில் கருத்தில்கொண்டு, இந்நூலில் பதிகங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. என்னென்ன குறைபாடுகள் நமக்கு உள்ளனவோ, அவற்றை அந்தந்தப் பதிகங்களில், தலைப்பில் விளக்கமாகக் கூறியிருக்கிறேன். அவரவர்க்குத் தேவையான பதிகங்களைத் தொடர்ந்து தொய்வின்றி விடாமல், நாள்தவறாமல், படனம் செய்துவந்தால் அந்தத் துன்பம் நிச்சயம் நீங்கும். பல்வேறு துன்பங்களை உடையவர்கள், அந்தந்தத் துன்பங்களைப் போக்குதற்கு எனத் தொகுக்கப்பட்டுள்ள பதிகங்களைப் படனம் செய்துவரவேண்டும்.

உறுதியான நம்பிக்கையோடு படனம் செய்து வாருங்கள்; நிச்சயம் பயன் பெறுவீர்கள். இவை அனுபவ வாயிலாகக் கிடைக்கப்பெற்ற உண்மைகள்.

எப்படிப் படனம் செய்யவேண்டும்?

படனம் என்ற சொல்லுக்குப் பாராயணம் என்று; பொருள். அஃதாவது நாள்தோறும் விடாமல் ஓதுவது ஆகும். இசை தெரிந்திருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. இசை தெரிந்தவர்கள் இசையோடு பாடிப் பயன் பெறலாம். இசை தெரியாதவர்கள் இயன்ற அளவு சற்று இசைத்துப் படனம் செய்தால் போதும். பயன் உண்டு.

படனம் செய்யும்போது, சொற்கள் வெளிப்பட வேண்டும். அச் சொற்களில் உள்ள ஒலி அலைகள், வலுவான மந்திர ஆற்றலை உடையன. அந்த ஆற்றல் நமக்கு ஓர் அரணாக அமைகிறது. எனவே, மிகவும் மெல்லிய குரலிலாவது, பதிகங்களை வாய்விட்டுப் படனம் செய்ய வேண்டும் என்பது மிகவும் முக்கியம். இசை முக்கியமில்லை என்பதை,

''கோழை மிடறாக கவிகோளும் இலவாக, இசை கூடும் வகையால்
ஏழை அடியார் அவர்கள் யாவை சொன சொல் மகிழும் ஈசன்''
(3–71–1)

என்று சம்பந்தப் பெருமான் அருளிச் செய்திருப்பதிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

படனம் செய்யும்போது, இந்தத் துன்பத்திலிருந்து என்னை விடுவித்துவிடு என்று இறைவனை வேண்டி, உள்ளம் உருக, உறைப்புடன் படனம் செய்யவேண்டும். அழுத்தமான நம்பிக்கை வேண்டும். இது மிக மிக முக்கியம்.

''வல்லதோர் இச்சையினால் வழிபாடு
இவைபத்தும் வாய்க்கச் சொல்லுதல்
கேட்டல் வல்லார், துன்பம் துடைப்பாரே''
(1–105–11)

என்று ஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்திருப்பதிலிருந்து, உங்களுக்குள்ள பதிகத்தை எவ்வளவு உறைப்புடன் படனம் செய்ய வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

''சொல்லுதல் கேட்டல் வல்லார்'' என்பது, எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் தாமே இப்பதிகத்தைப் படனம் செய்ய வேண்டும் என்பதையும், எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் பிறரைப் பாடச் செய்து கேட்டல் வேண்டும் என்பதையும் குறிக்கின்றது.

உங்களுக்கு வேண்டியவர்களுக்காக நீங்கள் குறிப்பிட்ட பதிகத்தைப் படனம் செய்தாலும் பயன் ஏற்படும்.

காலையில் எழுந்ததும், கடன்களை முடித்து, உங்களுக்குத் தெரிந்த அளவு சற்று இசைத்துப் பாடினால் போதும். நாள்தோறும் இடைவிடாமல் ஓதி வாருங்கள். ஓதத் தொடங்கிய சில நாட்களிலேயே, தெளிவு ஏற்படுவதை நீங்களே உணர்வீர்கள். மனத்தை ஒருமுகப்படுத்தி தொடர்ந்து விடாமல் முழு நம்பிக்கையுடன் படனம் செய்யுங்கள். கோரிய பயன்களை நிச்சயம் பெறுவீர்கள். இனிப் பதிகப் படனத்திற்குச் செல்லுங்கள்.

அன்பன்,

திருவிடைமருதூர்.
30.12.1992.

கு. வைத்தியநாதன்.



உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

குலம்கெடுத்துக் கோள்நீக்க வல்லான் தன்னைக்
குலவரையன் மடப்பாவை இடப்பா லானை
மலம்கெடுத்து மாதீர்த்தம் ஆட்டிக் கொண்ட
மறையவனைப் பிறைதவழ்செஞ் சடையி னானைச்
சலம்கெடுத்துத் தயாமூல தன்மம் என்னும்
தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க் கெல்லாம்
நலம் கொடுக்கும் நம்பியை நள்ளாற் றானை
நான் அடியேன் நினைக்கப்பெற்று உய்ந்த வாறே.

திருச்சிற்றம்பலம்.

– திருநாவுக்கரசு சுவாமிகள்.

உ

சிவமயம்

விதியை வெல்வது எப்படி?

முதல் பாவம்

1. ஆயுள் முழுவதும் எந்தவிதக் குறையும் இன்றி வாழ்வதற்கு ஓதவேண்டிய பதிகம்

பண்: காந்தாரப்பஞ்சமம் **(3–22)** இராகம்:கேதாரகௌளை

திருச்சிற்றம்பலம்

1. துஞ்சலும் துஞ்சல் இல்லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின், நாள்தொறும்;
வஞ்சகம் அற்று அடி வாழ்த்த, வந்த கூற்று
அஞ்ச உதைத்தன, அஞ்சு எழுத்துமே.

2. மந்திரம் நான்மறை ஆகி, வானவர்
சிந்தையுள் நின்று, அவர்தம்மை ஆள்வன;
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்சு எழுத்துமே.

3. ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி, ஒண்சுடர்
ஞான விளக்கினை ஏற்றி, நன்புலத்து
ஏனை வழிதிறந்து ஏத்துவார்க்கு, இடர்
ஆன கெடுப்பன, அஞ்சு எழுத்துமே.

4. நல்லவர் தீயர் எனாது, நச்சினர்
செல்லல் கெடச் சிவமுத்தி காட்டுவ;
கொல்ல நமன்தமர் கொண்டு போம் இடத்து
அல்லல் கெடுப்பன, அஞ்சு எழுத்துமே

5. கொங்குஅலர் வன்மதன் வாளிஐந்து; அகத்து
அங்குள பூதமும் அஞ்ச; ஐம் பொழில்
தங்கு அரவின் படம் அஞ்சும்; தம் உழை
அங்கையில் ஐவிரல்; அஞ்சு எழுத்துமே.

6. தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்,
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்,
இம்மை வினை அடர்த்து எய்தும் போழ்தினும்
அம்மையினும் துணை அஞ்சு எழுத்துமே.

7. வீடு பிறப்பை அறுத்து மெச்சினர்;
பீடை கெடுப்பன; பின்னை நாள்தொறும்
மாடு கொடுப்பன; மன்னு மாநடம்
ஆடி உகப்பன, அஞ்சு எழுத்துமே.

8. வண்டு அமர் ஓதி மடந்தை பேணின,
பண்டை இராவணன் பாடி உய்ந்தன;
தொண்டர்கள் கொண்டு துதித்தபின், அவர்க்கு
அண்டம் அளிப்பன அஞ்சு எழுத்துமே.

9. கார்வணன், நான்முகன், காணுதற்கு ஒணாச்
சீர்வணச் சேவடி செவ்வி, நாள்தொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்கு
ஆர்வணம் ஆவன, அஞ்சு எழுத்துமே.

10. புத்தர், சமண் கழுக்கையர், பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறு அணிவார் வினைப் பகைக்கு
அத்திரம் ஆவன அஞ்சு எழுத்துமே.

11. நற்றமிழ் ஞானசம் பந்தன், நால்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றம்இல் மாலை ஈர்ஐந்தும் அஞ்சு எழுத்து
உற்றன வல்லவர் உம்பர் ஆவரே.

திருச்சிற்றம்பலம்.

இரண்டாம் பாவம்

2. பொருளாதார நிலை சீர்பெறுவதற்கும், வறுமை நீங்குவதற்கும் ஓதவேண்டிய பதிகம்.

பண்: காந்தார பஞ்சமம் (3–4) இராகம்: கேதாரகௌளை

திருச்சிற்றம்பலம்

1. இடரினும் தளரினும் எனது உறு நோய்
தொடரினும் உனகழல் தொழுது எழுவேன்;
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே,

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள்? ஆவடுதுறை அரனே.

2. வாழினும் சாவினும் வருந்தினும் போய்
வீழினும் உனகழல் விடுவேன் அல்லேன்;
தாழ்இளம் தடம்புனல் தயங்கு சென்னிப்
போழ் இளமதி வைத்த புண்ணியனே.

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்றுஎமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள்? ஆவடுதுறை அரனே.

3. நனவினும் கனவினும் நம்பா, உன்னை
மனவினும் வழிபடல் மறவேன், அம்மான்
புனல்விரி நறுங் கொன்றைப் போது அணிந்த
கனல்எரி அனல்புல்கு கையவனே.

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள்? ஆவடுதுறை அரனே.

4. தும்மலொடு அருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடிஅலால், அரற்ருது என் நா;
கைம்மல்கு வரிசிலைக் கணை ஒன்றினால்
மும்மதில் எரி எழ முனிந்தவனே.

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்றுஎமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள்? ஆவடுதுறை அரனே.

5. கையது வீழினும் கழிவு உறினும்
செய்கழல் அடிஅலால் சிந்தை செய்யேன்.
கொய்அணி நறுமலர் குலாய சென்னி
மைஅணி மிடறு உடை மறையவனே

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்றுஎமக்கு இல்லையேல்
அதுவோ உனதுஇன் அருள்? ஆவடுதுறை அரனே.

6. வெம்துயர் தோன்றி ஓர் வெருஉறினும்
எந்தாய், உன் அடிஅலால் ஏத்தாது, என் நா;
ஐந்தலை அரவு கொண்டு அரைக்கு அசைத்த
சந்தவெண் பொடிஅணி சங்கரனே.

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்றுஎமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள்? ஆவடுதுறை அரனே.

7. வெப்பொடு விரவி ஓர் வினை வரினும்
அப்பா, உன் அடி அலால் அரற்றுது, என் நா;
ஒப்புடை ஒருவனை உரு அழிய
அப்படி அழல் எழ விழித்தவனே.

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்றுஎமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள்? ஆவடுதுறை அரனே.

8. பேர் இடர் பெருகி, ஓர் பிணி வரினும்
சீர் உடைக் கழல் அலால், சிந்தை செய்யேன்;
ஏர் உடை மணி முடி இராவணனை
ஆர் இடர் பட, வரை அடர்த்தவனே.

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்றுஎமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள்? ஆவடுதுறை அரனே.

9. உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் நின்
ஒண்மலர் அடிஅலால் உரையாது, என் நா;
கண்ணனும் கடிகமழ் தாமரை மேல்
அண்ணலும் அளப்பு அரிது ஆயவனே

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்றுஎமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள்? ஆவடுதுறை அரனே.

10. பித்தொடு மயங்கி ஓர் பிணி வரினும்
அத்தா, உன்அடி அலால் அரற்றுது என்நா;
புத்தரும் சமணரும் புறன் உரைக்கப்
பத்தர்கட்கு அருள் செய்து பயின்றவனே,.

இதுவோ எமைஆளுமாறு? ஈவது ஒன்றுஎமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள்? ஆவடுதுறை அரனே.

11. அலைபுனல் ஆவடு துறைஅமர்ந்த
இலைநுனை வேல்படை எம் இறையை
நலம்மிகு ஞானசம் பந்தன் சொன்ன
விலைஉடை அருந்தமிழ் மாலை வல்லார்

வினை ஆயின நீங்கிப்போய் விண்ணவர் வியன் உலகம்
நிலைஆக முன்ஏறுவர்; நிலமிசை நிலைஇலரே.

திருச்சிற்றம்பலம்

3. உணவும், உடையும் குறைவின்றிக் கிடைப்பதற்கு ஓதவேண்டிய பதிகம்

பண்: கொல்லி (7–34) இராகம்: நவரோசு

திருச்சிற்றம்பலம்

1. தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே;
எந்தை புகலூர் பாடுமின்; புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும்,
ஏத்தலாம்இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு,
யாதும் ஐயுறவு இல்லையே.

2. மிடுக்கு இலாதானை "வீமனே,
விறல் விசயனே வில்லுக்கு இவன்" என்று
கொடுக்கிலாதானைப் "பாரியே"
என்று கூறினும் கொடுப்பார் இலை;
பொடிக்கொள் மேனி, எம் புண்ணியன்,
புகலூரரைப் பாடுமின் புலவீர்காள்;
அடுக்குமேல் அமர் உலகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே.

3. "காணியேல் பெரிது உடையனே,
கற்று நல்லனே, சுற்றம் நல்கிளை
பேணியே, விருந்து ஓம்புமே"
என்று பேசினும் கொடுப்பார் இலை
பூணி பூண்டு உழப்புள் சிலம்பும்,
தண்புகலூர் பாடுமின், புலவீர்காள்;
ஆணியாய் அமருலகம் ஆள்வதற்கு,
யாதும் ஐயுறவு இல்லையே.

4. நரைகள் போந்து மெய் தளர்ந்து,
மூத்து, உடல்நடுங்கி நிற்கும் இக்கிழவனை
"வரைகள் போல், திரள் தோளனே"
என்று வாழ்த்தினும் கொடுப்பார் இலை;
புரைவெள் ஏறு உடைப் புண்ணியன்
புகலூரரைப் பாடுமின், புலவீர்காள்
அரையனுய் அமருலகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே.

5. வஞ்ச நெஞ்சனை, மா சழக்கனைப்
பாவியை, வழக்கு இல்லியைப்
பஞ்ச துட்டனை, 'சாதுவே'
என்று பாடினும் கொடுப்பார் இலை;

பொன்செய் செஞ்சடைப் புண்ணியன்,
புகலூரரைப் பாடுமின், புலவீர்காள்;
நெஞ்சில் நோய் அறுத்து,
உஞ்சுபோவதற்கு யாதும் ஐயுறவு இல்லையே.

6. நலம் இலாதானை, ''நல்லனே'' என்று,
நரைத்த மாந்தரை, ''இளையனே''
குலம் இலாதானைக் ''குலவனே'' என்று
கூறினும் கொடுப்பார் இலை;
புலம் எலாம் வெறி கமழும் பூம்
புகலூரரைப் பாடுமின், புலவீர்காள்;
அலமராது அமருலகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே.

7. நோயனைத், ''தடந்தோளனே'' என்று,
நொய்ய மாந்தரை, ''விழுமிய
தாய் அன்றோ புலவோர்க்கு எலாம்'' என்று
சாற்றினும் கொடுப்பார் இலை;
போய் உழன்று கண் குழியாதே,
எந்தை புகலூர் பாடுமின், புலவீர்காள்;
ஆயம் இன்றிப் போய், அண்டம்
ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே.

8. எள் விழுந்த இடம் பார்க்கும் ஆகிலும்
ஈக்கும் ஈகிலன் ஆகிலும்
''வள்ளலே, எங்கள் மைந்தனே''
என்று வாழ்த்தினும் கொடுப்பார் இலை;
புள் எலாம் சென்று சேரும் பூம்
புகலூரரைப் பாடுமின், புலவீர்காள்;
அல்லல் பட்டு அழுந்தாது போவதற்கு,
யாதும் ஐயுறவு இல்லையே.

9. கற்றிலாதானைக், ''கற்று நல்லனே''
''காமதேவனை ஒக்குமே''
முற்றிலாதானை, ''முற்றனே'' என்று
மொழியினும் கொடுப்பார் இலை;
பொத்தில் ஆந்தைகள் பாட்டு அருப்
புகலூரைப் பாடுமின், புலவீர்காள்;
அத்தன்ஆய் அமருலகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே.

10. ''தையலாருக்குஓர் காமனே'' என்றும்,
''சால நல் வழக்குடையனே
கைஉலாவிய வேலனே'' என்று,
கழறினும் கொடுப்பார் இலை;
பொய்கை ஆவியில் மேதியாய்
புகலூரைப் பாடுமின், புலவீர்காள்;
ஐயனாய் அமருலகம் ஆள்வதற்கு,
யாதும் ஐயுறவு இல்லையே.

11. செறுவினில் செழும் கமலம் ஓங்கு
தென்புகலூர் மேவிய செல்வனை
நறவம் பூம்பொழில் நாவலூரன், வனப்பகை
அப்பன், சடையன் தன்
சிறுவன், வன் தொண்டன், ஊரன், பாடிய
பாடல் பத்து இவை வல்லவர்
அறவனார் அடி சென்று சேர்வதற்கு,
யாதும் ஐயுறவு இல்லையே.

திருச்சிற்றம்பலம்

4. கண்களில் உள்ள கோளாறு நீங்குவதற்கும் பார்வை இழந்த கண்களில் ஒளியைப் பெறுவதற்கும் ஓதவேண்டிய இரு பதிகங்கள்

இடக்கண்ணில் இடர் நீங்குவதற்கு

பண்: தக்கேசி (7–61) இராகம்: காம்போதி

திருச்சிற்றம்பலம்

1. ஆலம்தான் உகந்து அமுது செய்தானை,
ஆதியை அமரர் தொழுது ஏத்தும்
சீலம்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பார் அவர் சிந்தை உளானை
ஏலவார் குழலாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே.

2. உற்றவர்க்கு உதவும் பெருமானை
ஊர்வது ஒன்று உடையான், உம்பர்கோனை
பற்றினுர்க்கு என்றும் பற்றவன் தன்னைப்
பாவிப்பார் மனம் பாவிக் கொண்டானை
அற்றம்இல் புகழாள், உமை நங்கை
ஆதரித்து வழிபடப் பெற்ற
கற்றைவார் சடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே.

3. திரியும் முப்புரம் தீப்பிழம்பு ஆகச்
செங்கண் மால்விடை மேல் திகழ்வானைக்
கரியின் ஈர்உரி போர்த்து உகந்தானைக்
காமனைக் கனலா விழித்தானை

வரிகொள் வெள்வளையாள் உமை நங்கை
மருவி ஏத்தி வழிபடப் பெற்ற
பெரிய கம்பனை, எங்கள் பிரானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே.

4. குண்டலம் திகழ் காது உடையானை
கூற்று உதைத்த கொடுந் தொழிலானை
வண்டு அலம்பும் மலர்க் கொன்றையினானை
வாள்அரா மதிசேர் சடையானை
கெண்டை அம் தடங்கண் உமை நங்கை
கெழுமி ஏத்தி வழிபடப் பெற்ற
கண்டம் நஞ்சு உடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே.

5. வெல்லும் வெண்மழு ஒன்று உடையானை,
வேலை நஞ்சு உண்ட வித்தகன் தன்னை,
அல்லல் தீர்த்து அருள் செய்ய வல்லானை,
அருமறை அவை அங்கம் வல்லானை,
எல்லை இல் புகழாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
நல்ல கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே.

6. திங்கள் தங்கிய சடை உடையானை,
தேவ தேவனை, செழுங்கடல் வளரும்
சங்க வெண்குழைக் காது உடையானை,
சாம வேதம் பெரிது உகப்பானை
மங்கை நங்கை மலைமகள் கண்டு
மருவி ஏத்தி வழிபடப் பெற்ற
கங்கை யாளனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே.

7. விண்ணவர் தொழுது ஏத்த நின்றானை,
வேதம்தான் விரித்து ஓத வல்லானை,
நண்ணினார்க்கு என்றும் நல்லவன்தன்னை,
நாளும் நாம் உகக்கின்ற பிரானை,
எண்இல் தொல் புகழாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கண்ணும் மூன்று உடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே.

8. சிந்தித்து என்றும் நினைந்து எழுவார்கள்
சிந்தையில் திகழும் சிவன் தன்னை
பந்தித்த வினைப் பற்று அறுப்பானை
பாலொடு ஆன் அஞ்சும் ஆட்டு உகந்தானை
அந்தம் இல் புகழாள் உமைநங்கை
ஆதரித்து வழிபடப் பெற்ற
கந்தவார் சடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே.

9. வரங்கள் பெற்று உழல், வாள் அரக்கர் தம்
வாலிய புரம் மூன்று எரித்தானை
நிரம்பிய தக்கன்தன் பெரு வேள்வி
நிரந்தரம் செய்த நிட்கண்டனைப்
பரந்த தொல் புகழாள் உமை நங்கை
பரவி ஏத்தி வழிபடப் பெற்ற
கரங்கள் எட்டு உடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே.

10. எள்கல் இன்றி இமையவர் கோனை
ஈசனை வழிபாடு செய்வாள் போல்
உள்ளத்து உள்கி, உகந்து உமை நங்கை
வழிபடச் சென்று நின்றவா கண...

வெள்ளம் காட்டி வெருட்டிட அஞ்சி
வெருவி ஓடித்தழுவ வெளிப்பட்ட
கள்ளக் கம்பனை, எங்கள் பிரானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே.

11. பெற்றம் ஏறு உகந்து ஏற வல்லானை
'பெரிய எம்பெருமான்' என்று எப்போதும்
கற்றவர் பரவப் படுவானைக்
"காணக் கண் அடியேன் பெற்றது" என்று
கொற்றவன், கம்பன், கூத்தன் எம்மானைக்
குளிர் பொழில், திரு நாவல் ஆரூரன்
நற்றமிழ் இவை ஈர்ஐந்தும் வல்லார்
நன்னெறி உலகு எய்துவர்தாமே.

திருச்சிற்றம்பலம்

5. வலக்கண் கோளாறு நீங்குவதற்கு

பண்: செந்துருத்தி **(7–95)** இராகம்: மத்தியமாவதி

திருச்சிற்றம்பலம்

1. மீளா அடிமை உமக்கே ஆளாய்ப்,
பிறரை வேண்டாதே
மூளாத் தீப் போல் உள்ளே கனன்று,
முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங்கு இருப்பீர்? திருவாரூரீர்
வாழ்ந்து போதீரே.

2. விற்றுக்கொள்வீர்; ஒற்றி அல்லேன்;
விரும்பி ஆட்பட்டேன்;
குற்றம் ஒன்றும் செய்தது இல்லை;
கொத்தை ஆக்கினீர்;
எற்றுக்கு அடிகேள், என்கண்
கொண்டீர்? நீரே பழிப்பட்டீர்;
மற்றைக் கண்தான் தாராது ஒழிந்தால்,
வாழ்ந்து போதீரே.

3. அன்றில் முட்டாது அடையும் சோலை
ஆரூர் அகத்தீரே,
கன்று முட்டி உண்ணச் சுரந்த
காலி அவைபோல,
என்றும் முட்டாப் பாடும் அடியார்
தம்கண் காணாது,
குன்றில் முட்டிக் குழியில் விழுந்தால்,
வாழ்ந்து போதீரே.

4. துருத்தி உறைவீர்; பழனம் பதியாச்
சோற்றுத்துறை ஆள்வீர்,
இருக்கை திருஆரூரே உடையீர்;
மனமேஎன வேண்டா;
அருத்தி உடைய அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வருத்தி வைத்து, மறுமை பணித்தால்,
வாழ்ந்து போதீரே.

5. செந்தண் பவளம் திகழும் சோலை
இதுவோ திருஆரூர்?
எந்தம் அடிகேள், இதுவே ஆம்ஆறு,
உமக்கு ஆட்பட்டோர்க்கு?

சந்தம் பலவும் பாடும் அடியார்
தம் கண் காணுது
வந்து, ''எம்பெருமான் முறையோ?''
என்றுல், வாழ்ந்து போதீரே.

6. தினைத்தாள் அன்ன செங்கால்
நாரை சேரும் திரு ஆரூர்ப்
புனைத்தார் கொன்றைப் பொன்போல்
மாலைப் புரிபுன் சடையீரே,
தனத்தால் இன்றித் தாம்தாம்
மெலிந்து, தம்கண் காணுது,
மனத்தால் வாடி, அடியார்
இருந்தால், வாழ்ந்து போதீரே.

7. ஆயம் பேடை அடையும் சோலை
ஆரூர் அகத்தீரே,
ஏய எம்பெருமான், இதுவே ஆம்ஆறு,
உமக்கு ஆட்பட்டோர்க்கு?
மாயம் காட்டிப் பிறவி காட்டி,
மறவா மனம்காட்டிக்
காயம் காட்டிக் கண்ணீர் கொண்டால்,
வாழ்ந்து போதீரே.

8. கழியாய், கடல்ஆய், கலன்ஆய்,
நிலன்ஆய், கலந்த சொல்ஆகி,
இழியாக் குலத்தில் பிறந்தோம்;
உம்மை இகழாது ஏத்துவோம்
பழிதான் ஆவது அறியீர்,
அடிகேள்பாடும் பத்தரோம்;
வழிதான் காணுது, அலமந்து
இருந்தால் வாழ்ந்து போதீரே.

9. "பேயோடேனும் பிறிவுஒன்று இன்னாது"
என்பர் பிறர்எல்லாம்;
காய்தான் வேண்டில், கனிதான் அன்றோ,
கருதிக் கொண்டக்கால்?
நாய்தான் போல நடுவே திரிந்தும்,
உமக்கு ஆட்பட்டோர்க்கு
வாய்தான் திறவீர்; திருஆரூரீர்,
வாழ்ந்து போதீரே.

10. செருந்தி செம்பொன் மலரும் சோலை
இதுவோ, திருஆரூர்?
பொருந்தித் திருமூ லட்டா னம்மே
இடமாக் கொண்டீரே;
இருந்தும் நின்றும், கிடந்தும், உம்மை
இகழாது ஏத்துவோம்;
வருந்தி வந்தும், உமக்கு ஒன்று
உரைத்தால், வாழ்ந்து போதீரே.

11. காரூர் கண்டத்து எண்தோள் முக்கண்
கலைகள் பலஆகி,
ஆரூர்த் திருமூ லட்டா னத்தே
அடிப்பேர் ஆரூரன்;
பாரூர் அறிய, என்கண் கொண்டீர்,
நீரே பழிப்பட்டீர்,
வாரூர் முலையாள் பாகம் கொண்டீர்,
வாழ்ந்து போதீரே.

திருச்சிற்றம்பலம்

6. *சொல் சோர்வு நீங்குவதற்கும், திக்குவாய் மாறிச் சீர்பெறுவதற்கும், சிறந்த பேச்சாளர் ஆவதற்கும் ஓதவேண்டிய பதிகம்*

மோகன இராகம் – திருவாசகம் – திருச்சாழல்

திருச்சிற்றம்பலம்

1. பூசுவதும் வெண்ணீறு
பூண்பதுவும் பொங்குஅரவம்,
பேசுவதும் திருவாயால்
மறைபோலும்? காண், ஏடி!
பூசுவதும் பேசுவதும்
பூண்பதுவும் கொண்டு என்னே?
ஈசன்அவன், எவ்வுயிர்க்கும்
இயல்புஆனான்; சாழலோ.

2. என்அப்பன், எம்பிரான்
எல்லார்க்கும் தான்ஈசன்
துன்னம்பெய் கோவணமாக்
கொள்ளும்அது, ஏன்ஏடீ?
மன்னுகலை, துன்னுபொருள்,
மறைநான்கே, வான்சரடாத்
தன்னையே கோவணமாச்
சாத்தினன்; காண்; சாழலோ.

3. கோயில் சுடுகாடு
கொல்புலித்தோல், நல்ஆடை;
தாயும் இலி; தந்தை இலி;
தான்தனியன்; காண்; ஏடி!
தாயும்இலி, தந்தை இலி
தான்தனியன் ஆயிடினும்,
காயில், உலகு அனைத்தும்,
கல்பொடி, காண், சாழலோ.

4. அயனை, அனங்கனை,
அந்தகனை, சந்திரனை
வயனங்கள் மாயா
வடுச்செய்தான்; காண், ஏடீ!
நயனங்கள் மூன்றுஉடைய
நாயகனே தண்டித்தால்
சயம்அன்றோ வானவர்க்குத்
தாழ்குழலாய்? சாழலோ.

5. தக்கனையும் எச்சனையும்
தலைஅறுத்து, தேவர்கணம்
தொக்கனவந் தவர்தம்மைத்
தொலைத்ததுதான் என் ஏடீ?
தொக்கனவந் தவர்தம்மைத்
தொலைத்துஅருளி, அருள்கொடுத்துஅங்கு
எச்சனுக்கு மிகைத்தலைமற்று
அருளினன்காண்; சாழலோ.

6. அலரவனும் மால்அவனும்
அறியாமே, அழல்உருஆய்,
நிலம்முதல், கீழ்அண்டம்உற
நின்றதுதான், என் ஏடீ?
நிலம்முதல் கீழ்அண்டம்உற
நின்றிலனேல், இருவரும்தம்
சலமுகத்தால் ஆங்காரம்
தவிரார், காண்; சாழலோ.

7. மலைமகளை ஒருபாகம்
வைத்தலுமே, மற்றொருத்தி
சலமுகத்தால் அவன்சடையில்
பாயும்அது, என்ஏடீ?

சலமுகத்தால் அவன் சடையில்
பாய்ந்திலளேல், தரணிஎல்லாம்,
பிலமுகத்தே புகப்பாய்ந்து,
பெருங்கேடாம்; சாழலோ.

8. கோலாலம் ஆகிக் குரைகடல்வாய்;
அன்று எழுந்த
ஆலாலம் உண்டான்;
அவன் சதுர்தான் என் ஏடீ?
ஆலாலம் உண்டிலனேல்,
அன்றுஅயன் மால் உள்ளிட்ட
மேல்ஆய தேவர்எல்லாம்
வீடுவர்காண்; சாழலோ.

9. தென்பால் உகந்து ஆடும்
தில்லைச்சிற் றம்பலவன்,
பெண்பால் உகந்தான்
பெரும்பித்தன் காண்; ஏடீ!
பெண்பால் உகந்திலனேல்
பேதாய், இருநிலத்தோர்
விண்பால் யோகுஎய்தி
வீடுவர்காண்; சாழலோ.

10. தான்அந்தம் இல்லான்
தனைஅடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத்து
அழுத்துவித்தான்; காண்; ஏடீ!
ஆனந்த வெள்ளத்து
அழுத்துவித்த திருவடிகள்,
வான்உந்து தேவர்கட்குஓர்
வான்பொருள்; காண்; சாழலோ.

11. நங்காய், இதுஎன்னதவம்?
நரம்போடு எலும்புஅணிந்து
கங்காளம் தோள்மேலே
காதலித்தான்; காண் ஏடீ!
கங்காளம் ஆமாகேள்
கால அந்தரத்து இருவர்,
தம்காலம் செய்யத்
தரித்தனன்காண் சாழலோ.

12. கான் ஆர் புலித்தோல்
உடை;தலை ஊண்; காடுபதி
ஆனல் அவனுக்கு இங்கு
ஆட்படுவார் ஆர்? ஏடீ!
ஆனலும் கேளாய்
அயனும் திருமாலும்,
வான்நாடர் கோவும்,
வழி அடியார் சாழலோ.

13. மலைஅரையன் பொற்பாவை,
வாள்நுதலாள், பெண்திருவை,
உலகுஅறியத் தீ வேட்டான்
என்னும், அது என் ஏடீ!
உலகுஅறியத் தீ வேளாது
ஒழிந்தனனேல், உலகுஅனைத்தும்
கலைநவின்ற பொருள்கள் எல்லாம்,
கலங்கிடும், காண்; சாழலோ.

14. தேன்புக்க தண்பணைசூழ்
தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்கு நட்டம்
பயிலும் அது என்? ஏடீ!

தான்புக்கு நட்டம்
பயின்றிலனேல், தரணிஎல்லாம்
ஊன்புக்க வேல் காளிக்கு
ஊட்டுஆம்; காண்; சாழலோ.

15. கடகரியும் பரிமாவும்
தேரும் உகந்து ஏருதே,
இடபம் உகந்து ஏறியவாறு,
எனக்குஅறிய இயம்பு; ஏடீ!
தடமதில்கள் அவைமூன்றும்,
தழல்எரித்த அந்நாளில்,
இடபம் அதுவாய்த் தாங்கினுன்,
திருமால்காண்; சாழலோ.

16. நன்ருக நால்வர்க்கும்
நான்மறையின் உட்பொருளே,
அன்று, ஆலின்கீழ் இருந்து, அங்கு
அறம்உரைத்தான்; காண்; ஏடீ!
அன்று, ஆலின்கீழ் இருந்து, அங்கு
அறம் உரைத்தான் ஆயிடினும்
கொன்ருன்காண், புரம்மூன்றும்
கூட்டோடே; சாழலோ.

17. அம்பலத்தே கூத்துஆடி,
அமுதுசெயப் பலிதிரியும்
நம்பனையும் தேவன் என்று,
நண்ணும் அது என்? ஏடீ!
நம்பனையும் ஆமாகேள்;
நான்மறைகள் தாம் அறியா
''எம்பெருமான், ஈசா'' என்று
ஏத்தின காண்; சாழலோ.

18. சலம் உடைய சலந்தரன் தன்
உடல்தடிந்த நல் ஆழி,
நலம்உடைய நாரணற்கு, அன்று
அருளியவாறு என்? ஏடீ!
நலம் உடைய நாரணன், தன்
நயனம்இடந்து அரன் அடிக்கீழ்
அலர்ஆக இட, ஆழி
அருளினன்; காண்; சாழலோ.

19. அம்பரம்ஆம், புள்ளித்தோல்;
ஆலாலம் ஆர்அமுதம்;
எம்பெருமான் உண்டசதுர்
எனக்கு அறிய இயம்பு; ஏடீ!
எம்பெருமான் ஏதுஉடுத்து,
அங்குஏது அமுது செய்திடினும்
தம்பெருமை தான் அறியாத்
தன்மையன்; காண்; சாழலோ.

20. அரும்தவர்க்கு ஆலின்கீழ்
அறம்முதலா நான்கினையும்
இருந்து, அவர்க்கு அருளும் – அது
எனக்கு அறிய இயம்பு; ஏடீ!
அரும்தவர்க்கு, அறம்முதல் நான்கு
அன்றுஅருளிச் செய்திலனேல்
திருந்த, அவருக்கு உலகுஇயற்கை
தெரியா; காண்; சாழலோ.

திருச்சிற்றம்பலம்

7. குடும்பத்தில் உள்ள குழப்பங்கள் தீர்வதற்கும், குடும்பத்தில் உள்ளவர் அனைவரும் அமைதியுடன் வாழ்வதற்கும் ஓதவேண்டிய பதிகம்.

பண்: கொல்லி (3–24) இராகம்: நவரோசு

திருச்சிற்றம்பலம்

1. மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்; வைகலும்
எண்ணில், நல்லகதிக்கு யாதும் ஓர்குறைவு இலை;
கண்ணில், நல்லஃதுஉறும்; கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

2. போதையார் பொன்கிண்ணத்து அடிசில் பொல்லாது எனத்
தாதையார் முனிவு உறத் தான் எனை ஆண்டவன்
காதையார் குழையினன்; கழுமல வளநகர்ப்
பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே.

3. தொண்டு அணை செய் தொழில், துயர் அறுத்து உய்யலாம்;
வண்டு அணை கொன்றையான், மதுமலர்ச் சடைமுடி;
கண்துணை நெற்றியான்; கழுமல வளநகர்ப்
பெண் துணை ஆக ஓர் பெருந்தகை இருந்ததே.

4. "அயர்வு உளோம்" என்று நீ அசைவு ஒழி நெஞ்சமே
நியர்வளை முன்கையாள் நேரிழை அவளொடும்
கயல் வயல் குதிகொளும் கழுமல வளநகர்ப்
பெயர்பல துதிசெய, பெருந்தகை இருந்ததே.

5. ''அடைவு இலோம்'' என்று நீஅயர்வு ஒழிநெஞ்சமே
விடை அமர் கொடியினன்; விண்ணவர் தொழுதுஎழும்
கடைஉயர் மாடம் ஆர் கழுமல வளநகர்ப்,
பெடை நடை அவளொடும் பெருந்தகை இருந்ததே.

6. மற்று ஒரு பற்று இலை, நெஞ்சமே; மறைபல
கற்ற நல் வேதியர் கழுமல வளநகர்ச்
சிற்றிடைப் பேர் அல்குல் திருந்திழை அவளொடும்
பெற்று ஏனை ஆள்உடைப் பெருந்தகை இருந்ததே.

7. குறை வளைவது மொழி குறைவு ஒழி, நெஞ்சமே
நிறை வளை முன்கையாள் நேரிழை அவளொடும்
கறை வளர் பொழில்அணி கழுமல வள நகர்ப்
பிறை வளர் சடைமுடிப் பெருந்தகை இருந்ததே.

8. அரக்கனூர், அருவரை எடுத்தவன் அலறிட
நெருக்கினார் விரலினால்; நீடுயாழ் பாடவே
கருக்கு வாள் அருள் செய்தான்; கழுமல வளநகர்ப்
பெருக்கும் நீரவளொடும் பெருந்தகை இருந்ததே.

9. நெடியவன் பிரமனும் நினைப்பு அரிதாய், அவர்
அடியொடு முடி அறியா அழல் உருவினன்;
கடிகமழ் பொழில் அணி கழுமல வளநகர்ப்
பிடிநடை அவளொடும் பெருந்தகை இருந்ததே.

10. தார் உறு தட்டு உடைச் சமணர் சாக்கியர்கள் தம்
ஆர் உறு சொல் களைந்து அடிஇணை அடைந்து
உய்ம்மின்
கார் உறு பொழில் வளர் கழுமல வளநகர்ப்
பேர் அறத்தாளொடும் பெருந்தகை இருந்ததே.

11. கருந்தடம் தேன்மல்கு கழுமல வளநகர்ப்
பெருந்தடங் கொங்கையோடு இருந்த எம்பிரான்தனை
அருந்தமிழ் ஞானசம்பந்தன் செந்தமிழ்
விரும்புவார் அவர்கள் போய், விண்ணுலகு ஆள்வரே.

திருச்சிற்றம்பலம்

8. கல்வியில் திறம் பெற்று உயர்வதற்கு ஓதவேண்டிய பதிகம்

பண்: இந்தளம் **(2–31)** இராகம்: நாதநாமக்கிரியை

திருச்சிற்றம்பலம்

1. சுற்றமொடு பற்றுஅவை துயக்குஅற அறுத்துக்
குற்றம்இல் குணங்களொடு கூடும் அடியார்கள்
மற்றவரை வானவர்தம் வான்உலகம் ஏற்றக்
கற்றவன் இருப்பது கருப்பறிய லூரே.

2. வண்டுஅணைசெய் கொன்றைஅது வார்சடைகள் மேலே
கொண்டு அணைசெய் கோலம்அது கோள்அரவி னோடும்
விண்டு அணைசெய் மும்மதிலும் வீழ்தர ஓர் அம்பால்
கண்டவன் இருப்பது கருப்பறிய லூரே.

3. வேதமொடு வேதியர்கள் வேள்வி முதல்ஆக
போதினொடு போதுமலர் கொண்டு புனைகின்ற
நாதன்என நள்இருள்முன் ஆடுகுழை தாழும்
காதவன் இருப்பது கருப்பறியலூரே.

4. மடம்படு மலைக்குஇறைவன் மங்கைஒரு பங்கன்
உடம்பினை விடக்கருதி நின்ற மறையோனைத்
தொடர்ந்து அணவு காலன் உயிர் காலஒரு காலால்
கடந்தவன் இருப்பது கருப்பறிய லூரே.

5. ஒருத்தி உமை யோடும் ஒருபாகம் அதுவாய
நிருத்தன் அவன் நீதிஅவன் நித்தன் நெறிஆய
விருத்தன் அவன் வேதம்என அங்கம் அவை ஓதும்
கருத்தவன் இருப்பது கருப்பறிய லூரே.

6. விண்ணவர்கள், வெற்பு அரசு பெற்றமகள் மெய்த்தேன்
பண்அமரும் மென்மொழியினுளை அணைவிப்பான்
எண்ணி வரும் காமன்உடல் வேவ எரிகாலும்
கண்ணவன் இருப்பது கருப்பறிய லூரே.

7. ஆதிஅடியைப் பணிய அப்பொடு மலர்ச்சேர்
சோதிஒளி நல்புகை வளர்க்கு வடுபுக்குத்
தீதுசெய வந்துஅணையும் அந்தகன் அரங்கக்
காதினன் இருப்பது கருப்பறிய லூரே.

8. வாய்ந்த புகழ் விண்ணவரும் மண்ணவரும் அஞ்சப்
பாய்ந்து அமர்செயும் தொழில் இலங்கை நகர்வேந்தற்கு
ஏய்ந்த புயம் அத்தனையும் இற்றுவிழ மேல்நாள்
காய்ந்தவன் இருப்பது கறிப்பறிய லூரே.

9. பரந்து அது நிரந்துவரு பாய்திரைய கங்கை
கரந்துஓர் சடைமேல்மிசை உகந்து அவளை வைத்து
நிரந்தர நிரந்து இருவர் நேடி அறியாமல்
கரந்தவன் இருப்பது கருப்பறிய லூரே.

10. அற்றம் மறையா அமணர் ஆதம் இலி புத்தர்
சொற்றம் அறியாதவர்கள் சொன்னசொலை விட்டுக்
குற்றம் அறியாத பெருமான் கொகுடிக் கோயில்
கற்று என இருப்பது கருப்பறிய லூரே.

11. நலம்தரு புனல்புகலி ஞானசம் பந்தன்
கலந்தவர் கருப்பறியன் மேய கடவுளைப்
பலம்தரு தமிழ்க்கிளவி பத்தும்இவை கற்று
வலம்தரும் அவர்க்கு வினைவாடல் எளிதுஆமே.

திருச்சிற்றம்பலம்

மூன்றாவது பாவம்

9. எடுத்தகாரியம் யாவினும் வெற்றி பெறுதற்கும், விஷசுரம், விஷக்கடி முதலியன நீங்குதற்கும் தொண்டையில் உள்ள கோளாறுகள் அனைத்தும் நீங்கி குரல் வளம் பெறுவதற்கும், செய்வினை, பில்லி, சூனியம் பாதிக்காமல் இருக்கும் பொருட்டும், துணிவுடன் செயலாற்றுவதற்கும், இளைய சகோதரன் நலம் பெறுவதற்கும் ஓத வேண்டிய பதிகம்.

பண்: வியாழக்குறிஞ்சி **(1–116)** இராகம்: சௌராஷ்ட்டிரம்

திருச்சிற்றம்பலம்

1. ''அவ்வினைக்கு இவ்வினைஆம்'' என்று
சொல்லும் அஃது அறிவீர்;
உய்வினை நாடாது இருப்பதும்
உம்தமக்கு ஊனம் அன்றே?
கைவினை செய்து எம்பிரான்
கழல் போற்றுதும்; நாம் அடியோம்;
செய்வினை வந்து எமைத் தீண்டப்
பெறா; திருநீலகண்டம்.

2. காவினை இட்டும் குளம்பல
தொட்டும், கனி மனத்தால்
'ஏ' வினையால் எயில் மூன்று
எரித்தீர்' என்று இருபொழுதும்
பூவினைக் கொய்து, மலர்அடி
போற்றுதும், நாம் அடியோம்
தீவினை வந்து எமைத்
தீண்டப்பெறா; திருநீலகண்டம்.

3. முலைத்தடம் மூழ்கிய போகங்களும்
மற்று எவையும் எல்லாம்
விலைத்தலை ஆவணம் கொண்டு
எமை ஆண்ட விரிசடையீர்
இலைத்தலைச் சூலமும் தண்டும்
மழுவும் இவை உடையீர்
சிலைத்து எமைத் தீவினை தீண்டப்
பெறா; திருநீலகண்டம்.

4. விண்உலகு ஆள்கின்ற
விச்சாதரர்களும் வேதியரும்
'புண்ணியர்' என்று இருபோதும்
தொழப்படும் புண்ணியரே
கண் இமையாதன மூன்று உடையீர்!
உம்கழல் அடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்
பெறா; திருநீலகண்டம்.

5. மற்று இணை இல்லா மலை திரண்டு
அன்ன திண்தோள் உடையீர்;
கிற்று எமை ஆட்கொண்டு கேளாது
ஒழிவதும் தன்மை கொல்லோ?

சொற்றுணை வாழ்க்கை துறந்து,
உம் திருவடியே அடைந்தோம்
செற்று எமைத் தீவினை தீண்டப்
பெறு; திருநீலகண்டம்.

6. மறக்கும் மனத்தினை மாற்றி, எம்
ஆவியை வற்புறுத்திப்
பிறப்பு இல் பெருமான், திருந்து
அடிக்கீழ்ப் பிழையாத வண்ணம்,
பறித்த மலர்கொடு வந்து, உமை
ஏத்தும் பணி அடியோம்;
சிறப்பு இலித் தீவினை தீண்டப்பெறு;
திருநீலகண்டம்.

7. ... ...

8. கருவைக் கழித்திட்டு, வாழ்க்கை
கடிந்து, உம்கழல் அடிக்கே,
உருகி மலர்கொடு வந்து உமை
ஏத்துதும்; நாம் அடியோம்;
செருவில் அரக்கனைச் சீரில்
அடர்த்து அருள்செய்தவரே,
திருஇலித் தீவினை தீண்டப் பெறு;
திரு நீலகண்டம்.

9. நாற்றமலர் மிசை நான்முகன்
நாரணன் வாது செய்து,
தோற்றம் உடைய அடியும் முடியும்
தொடர்வு அரியீர்;
தோற்றினும் தோற்றும்; தொழுது
வணங்குதும்; நாம் அடியோம்
சீற்றம் அது ஆம் வினை தீண்டப்பெறு;
திரு நீலகண்டம்.

10. சாக்கியப் பட்டும் சமண் உரு
ஆகி உடை ஒழிந்தும்
பாக்கியம் இன்றி இருதலைப்
போகமும் பற்றும் விட்டார்;
பூக்கமழ் கொன்றைப் புரிசடையீர்;
அடி போற்றுகின்றோம்;
தீக்குழித் தீவினை தீண்டப்
பெறு; திருநீலகண்டம்.

11. பிறந்த பிறவியில் பேணி எம்
செல்வன் கழல் அடைவான்
இறந்த பிறவி உண்டாகில்
இமையவர் கோன் அடிக்கண்
திறம்பயில் ஞானசம்பந்தன் செந்தமிழ்
பத்தும் வல்லார்
நிறைந்த உலகினில் வானவர்
கோனொடும் கூடுவரே.

திருச்சிற்றம்பலம்



நான்காம் பாவம்

9. தாயாரின் உடல்நிலை சீர்பெறுதற்கும், பிரசவம் சுகமாக அமைவதற்கும், உறவினர், நண்பர்களின் தொடர்பு நன்கு அமையப் பெறுதற்கும், வீடு, மனை முதலியன செம்மைஉறக் கட்டி முடிப்பதற்கும் ஓதவேண்டிய பதிகம்.

பண்: குறிஞ்சி (1–98) இராகம்: அரிகாம்போதி

திருச்சிற்றம்பலம்

1. நன்று உடையானை, தீயது இலானை, நரைவெள் ஏறு
ஒன்று உடையானை, உமை ஒருபாகம் உடையானை
சென்று அடையாத திரு உடையானை, சிராப்பள்ளிக்
குன்று உடையானைக் கூற என் உள்ளம் குளிரும்மே.

2. கைம் மகவு ஏந்திக் கடுவனொடு ஊடிக் கழை பாய்வான்
செம்முக மந்தி கருவரை ஏறும் சிராப்பள்ளி
வெம்முக வேழத்து ஈர்உரி போர்த்த விகிர்தா, நீ
பைம்முக நாகம் மதியுடன் வைத்தல் பழி அன்றே.

3. மந்தம் முழவம் மழலை ததும்ப, வரை நீழல்
செந்தண் புனமும் சுனையும் சூழ்ந்த சிராப்பள்ளி
சந்தம் மலர்கள் சடைமேல் உடையார், விடைஊரும்
எம்தம் அடிகள், அடியார்க்கு அல்லல் இல்லையே.

4. துறை மல்கு சாரல், சுனைமல்கு நீலத்து இடைவைகிச்,
சிறை மல்கு வண்டும் தும்பியும் பாடும் சிராப்பள்ளிக்
கறை மல்கு கண்டன், கனல் எரி ஆடும் கடவுள்எம்
பிறை மல்கு சென்னி உடையவன், எங்கள் பெருமானே.

5. கொலை வரையாத கொள்கையர் தங்கள் மதில் மூன்றும்
சிலைவரை ஆகச் செற்றன ரேனும், சிராப்பள்ளித்
தலைவரை நாளும் தலைவர் அல்லாமை உரைப்பீர்காள்,
நிலவரை நீலம் உண்டதும், வெள்ளை நிறம் ஆமே!

6. வெய்ய தண்சாரல் விரி நிற வேங்கைத் தண்போது
செய்ய பொன் சேரும் சிராப்பள்ளி மேய செல்வனூர்,
தையல் ஓர் பாகம் மகிழ்வர்; நஞ்சு உண்பர்; தலைஓட்டில்
ஐயமும் கொள்வர்; ஆர் இவர் செய்கை அறிவாரே.

7. வேய் உயர் சாரல் கருவிரல் ஊகம் விளையாடும்
சேய் உயர் கோயில் சிராப்பள்ளிமேய செல்வனூர்,
பேய் உயர் கொள்ளி கைவிளக்காகப், பெருமானூர்,
தீ உகந்து ஆடல் திருக்குறிப்பு ஆயிற்று; ஆகாதே.

8. மலைமல்கு தோளன் வலி கெட ஊன்றி, மலரோன்தன்
தலை கலன் ஆகப் பலிதிரிந்து உண்பர்; பழி ஓரார்;
சொல வல வேதம் சொலவல கீதம் சொல்லுங்கால்
சிலஅல போலும், சிராப்பள்ளிச் சேடர் செய்கையே.

9. அரப்பள்ளியானும் மலர் உறைவானும் அறியாமைக்
கரப்பு உள்ளி, நாடிக் கண்டிலரேனும், கல் சூழ்ந்த
சிராப்பள்ளி மேய வார்சடைச் செல்வர் மனைதோறும்
இரப்பு உள்ளீர்; உம்மை ஏதிலர் கண்டால், இகழாரே?

10. "நாணாது உடை நீத்தோர்களும், கஞ்சி நாள் காலை
ஊணாப் பகல் உண்டு ஓதுவோர்கள், உரைக்கும் சொல்
பேணாது, உறுசீர் பெறுதும்" என்பீர் எம்பெருமானூர்
சேணூர் கோயில் சிராப்பள்ளி சென்று சேர்மினே!

11. தேன் நயம் பாடும் சிராப்பள்ளியானைத், திரைசூழ்ந்த
கானல் சங்கு ஏறும் கழுமல ஊரில் கவுணியன்,
ஞானசம்பந்தன் நலமிகு பாடல் இவை வல்லார்,
வானசம்பந்தத் தவரொடும் மன்னி வாழ்வாரே.

திருச்சிற்றம்பலம்

ஐந்தாம் பாவம்

10. மக்கட் செல்வம் வாய்க்கப் பெறுவதற்கும், பட்டிமன்றம், கருத்தரங்கம் முதலியவற்றில் வாதத் திறமை பெறுவதற்கும், எழுத்தாற்றல் பெறுவதற்கும், தத்துவ ஞானத் தெளிவினைப் பெறுவதற்கும் ஓதவேண்டிய பதிகம்.

பண்: சீகாமரம் **(2–48)** இராகம்: நாதநாமக்கிரியை

திருச்சிற்றம்பலம்

1. கண் காட்டும் நுதலானும், கனல்
காட்டும் கையானும்,
பெண் காட்டும் உருவானும்,
பிறை காட்டும் சடையானும்
பண் காட்டும் இசையானும் பயிர்
காட்டும் புயலானும்
வெண் காட்டில் உறைவானும், விடை
காட்டும் கொடியானே.

2. பேய் அடையா, பிரிவு எய்தும்;
பிள்ளையினோடு உள்ளம் நினைவு
ஆயினவே வரம் பெறுவர்; ஐயுற
வேண்டா ஒன்றும்;
வேயனதோள் உமை பங்கன் வெண்காட்டு
முக்குள நீர்,
தோய்வினையார் அவர் தம்மைத்
தோயாவாம், தீவினையே.

3. மண்ணொடு நீர், அனல், காலோடு
ஆகாயம், மதி, இரவி,
எண்ணில் வரும் இயமானன், இக
பரமும், எண்திசையும்
பெண்ணினொடு ஆண், பெருமையொடு
சிறுமையும், ஆம் பேராளன்
விண்ணவர்கோன் வழிபட, வெண்காடு
இடமா விரும்பினனே.

4. விடம் உண்ட மிடற்று அண்ணல்
வெண்காட்டின் தண்புறவில்
மடல் விண்ட முடத்தாழை மலர் நிழலைக்
குருகு என்று
தடம் மண்டு துறைக்கெண்டை,
தாமரையின் பூமறையக்
கடல் விண்ட கதிர் முத்தம் நகை
காட்டும் காட்சியதே.

5. வேலை மலி தண்கானல் வெண்
காட்டான் திருவடிக்கீழ்
மாலை மலி வண்சாந்தால் வழிபடு
நல் மறையவன்தன்

மேல் அடர் வெங்காலன் உயிர் விண்ட
பினை, நமன் தூதர்,
ஆலமிடற்றான் அடியார் என்று,
அடர அஞ்சுவரே.

6. தண்மதியும் வெய்யரவும் தாங்கினன்,
சடையின் உடன்;
ஒண்மதிய நுதல் உமை ஓர்
கூறுஉகந்தான்; உறைகோயில்
பண்மொழியால் அவன் நாமம் பல
ஓதப், பசுங்கிள்ளை
வெண்முகில் சேர் கரும்பெணை மேல்
வீற்றிருக்கும் வெண்காடே.

7. சக்கரம் மாற்கு ஈந்தானும்,
சலந்தரனைப் பிளந்தானும்,
அக்கு அரைமேல் அசைத்தானும்
அடைந்துஅயிரா வதம்பணிய
மிக்கு அதனுக்கு அருள் சுரக்கும்
வெண்காடும் வினைதுரக்கும்
முக்குளம் நன்கு உடையானும்,
முக்கண்உடை இறையவனே.

8. பண்மொய்த்த இன்மொழியாள்,
பயம்எய்த மலைஎடுத்த
உன்மத்தன் உரம் நெரித்து, அன்று
அருள்செய்தான் உறைகோயில்,
கண்மொய்த்த கரு மஞ்ஞை
நடம்ஆட, கடல் முழங்க
விண்மொய்த்த பொழில் வரிவண்டு
இசைமுரலும் வெண்காடே.

9. கள் ஆர் செங் கமலத்தான்
கடல்கிடந்தான், எனஇவர்கள்
ஒள் ஆண்மை கொளற்கு ஓடி,
உயர்ந்து ஆழ்ந்தும், உணர்வு அரியான்;
வெள் ஆனை தவம் செய்யும் மேதகு வெண்
காட்டான் என்று
உள் ஆடி உருகாதார்
உணர்வு உடைமை, உணரோமே.

10. போதியர்கள் பிண்டியர்கள் மிண்டு
மொழி பொருள் என்னும்
பேதையர்கள் அவர்; பிரிமின்;
அறிவுடையீர், இதுகேள்மின்;
''வேதியர்கள் விரும்பியசீர்
வியன் திருவெண்காட்டான்'' என்று
ஓதியவர் யாதும் ஒரு தீது இலர்
என்று உணருமினே.

11. தண் பொழில் சூழ் சண்பையர் கோன்,
தமிழ்ஞான சம்பந்தன்,
விண் பொழி வெண் பிறைச் சென்னி
விகிர்தன்உறை வெண்காட்டைப்,
பண் பொலி செந் தமிழ் மாலை
பாடியபத்து இவை வல்லார்,
மண் பொலிய வாழ்ந்தவர், போய்
வான்பொலியப் புகுவாரே.

திருச்சிற்றம்பலம்.

ஆறும் பாவம்

11. வெப்பம் மிகுதியால் ஏற்படும் சுரநோய், பித்தசுரம் முதலிய நோய்கள் நீங்குவதற்கு ஓதவேண்டிய பதிகம்

பண்: காந்தாரம் (2–66) இராகம்: நவரோசு

திருச்சிற்றம்பலம்

1. மந்திரம் ஆவது நீறு; வானவர் மேலது நீறு;
சுந்தரம் ஆவது நீறு; துதிக்கப் படுவது நீறு;
தந்திரம் ஆவது நீறு; சமயத்தில் உள்ளது நீறு;
செந்துவர் வாய் உமை பங்கன், திரு ஆலவாயான் திருநீறே.

2. வேதத்தில் உள்ளது நீறு; வெந்துயர் தீர்ப்பது நீறு;
போதம் தருவது நீறு; புன்மை தவிர்ப்பது நீறு;
ஓதத் தகுவது நீறு; உண்மையில் உள்ளது நீறு;
சீதப் புனல் வயல் சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே.

3. முத்தி தருவது நீறு; முனிவர் அணிவது நீறு;
சத்தியம் ஆவது நீறு; தக்கோர் புகழ்வது நீறு;
பத்தி தருவது நீறு; பரவ இனியது நீறு;
சித்தி தருவது நீறு; திரு ஆலவாயான் திருநீறே.

4. காண இனியது நீறு; கவினைத் தருவது நீறு;
பேணி அணிபவர்க்கு எல்லாம் பெருமை கொடுப்பது நீறு;
மாணம் தகைவது நீறு; மதியைத் தருவது நீறு;
சேணம் தருவது நீறு; திரு ஆலவாயான் திருநீறே.

5. பூச இனியது நீறு; புண்ணியம் ஆவது நீறு;
பேச இனியது நீறு; பெருந்தவத் தோர்களுக்கு எல்லாம்
ஆசை கெடுப்பது நீறு; அந்தம்அது ஆவது நீறு;
தேசம் புகழ்வது நீறு; திரு ஆலவாயான் திருநீறே.

6. அருத்தம் அது ஆவது நீறு; அவலம் அறுப்பது நீறு;
வருத்தம் தணிப்பது நீறு; வானம் அளிப்பது நீறு;
பொருத்தம் அது ஆவது நீறு; புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே.

7. எயில் அது அட்டது நீறு; இருமைக்கும் உள்ளது நீறு;
பயிலப் படுவது நீறு; பாக்கியம் ஆவது நீறு;
துயிலைத் தடுப்பது நீறு; சுத்தம் அது ஆவது நீறு;
அயிலைப் பொலிதரு சூலத்து ஆலவாயான் திருநீறே.

8. இராவணன் மேலது நீறு; எண்ணத் தகுவது நீறு;
பராவணம் ஆவது நீறு; பாவம் அறுப்பது நீறு;
தராவணம் ஆவது நீறு; தத்துவம் ஆவது நீறு;
அரா வணங்கும் திருமேனி ஆலவாயான் திருநீறே.

9. மாலொடு அயன் அறியாத வண்ணமும் உள்ளது நீறு;
மேல் உறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண் பொடிநீறு;
ஏல உடம்பு இடர் தீர்க்கும்; இன்பம் தருவது நீறு;
ஆலம் அது உண்ட மிடற்று, எம் ஆலவாயான் திருநீறே.

10. குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமும் கூட
கண் திகைப்பிப்பது நீறு; கருத இனியது நீறு;
எண்திசைப் பட்ட பொருளார் ஏத்தும் தகையது நீறு;
அண்டத்தவர் பணிந்து ஏத்தும் ஆலவாயான் திருநீறே.

11. ஆற்றல் அடல் விடை ஏறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப், புகலி நிலாவும் பூசுரன் ஞான சம்பந்தன்
தேற்றித், தென்னன் உடல் உற்ற தீப்பிணி ஆயினதீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

திருச்சிற்றம்பலம்

13. பகைவர்களால் ஏற்படும் தொல்லைகளைப் போக்குவதற்கும், சிறை வாசத்தைத் தடுப்பதற்கும், சிறையிலிருந்து விரைவில் விடுபடுவதற்கும் ஓதவேண்டிய பதிகம்.

பண்: கௌசிகம் **(3–51)** இரகம்: பயிரவி

திருச்சிற்றம்பலம்

1. செய்யனே, திரு ஆலவாய் மேவிய
ஐயனே, 'அஞ்சல்' என்று அருள்செய்; எனைப்
பொய்யராம் அமணர் கொளுவும் சுடர்,
பையவே சென்று, பாண்டியற்கு ஆகவே.

2. சித்தனே, திரு ஆலவாய் மேவிய
அத்தனே, 'அஞ்சல்' என்று அருள்செய்; எனை
எத்தராம் அமணர் கொளுவும் சுடர்
பத்திமன், தென்னன், பாண்டியற்கு ஆகவே.

3. தக்கன் வேள்வி தகர்த்து அருள் ஆலவாய்ச்
சொக்கனே, 'அஞ்சல்' என்று அருள்செய்; எனை
எக்கராம் அமணர் கொளுவும் சுடர்
பக்கமே சென்று, பாண்டியற்கு ஆகவே.

4. சிட்டனே, திரு ஆலவாய் மேவிய
அட்ட மூர்த்தியனே, 'அஞ்சல்' என்று அருள்;
துட்டர் ஆம் அமணர் கொளுவும் சுடர்,
பட்டிமன், தென்னன், பாண்டியற்கு ஆகவே.

5. நண்ணலார் புரம் மூன்று எரி ஆலவாய்
அண்ணலே, 'அஞ்சல்' என்று அருள்செய்; எனை
எண் இலா அமணர் கொளுவும் சுடர்
பண் இயல் தமிழ்ப் பாண்டியற்கு ஆகவே.

6. 'தஞ்சம்' என்று உன் சரண் புகுந்தேனையும்
'அஞ்சல்' என்று அருள், ஆலவாய் அண்ணலே
வஞ்சம் செய்து அமணர் கொளுவும் சுடர்
பஞ்சவன் தென்னன் பாண்டியற்கு ஆகவே.

7. செங்கண் வெள்விடையாய், திரு ஆலவாய்
அங்கணா, 'அஞ்சல்' என்று அருள் செய்; எனை
கங்குலார் அமண்கையர் இடும் கனல்,
பங்கம் இல் தென்னன், பாண்டியற்கு ஆகவே.

8. தூர்த்தன் வீரன் தொலைத்து அருள் ஆலவாய்
ஆத்தனே, 'அஞ்சல்' என்று அருள் செய்; எனை
ஏத்திலா அமணர் கொளுவும் சுடர்,
பார்த்திவன் தென்னன், பாண்டியற்கு ஆகவே.

9. தாவினான் அயன் தான் அறியா வகை
மேவினாய் திரு ஆலவாயாய், அருள்;
தூவிலா அமணர் கொளுவும் சுடர்
பாவினான் தென்னன், பாண்டியற்கு ஆகவே.

10. எண்திசைக்கு எழில் ஆலவாய் மேவிய
அண்டனே, 'அஞ்சல்' என்று அருள்செய்; எனை
குண்டர் ஆம் அமணர் கொளுவும் சுடர்,
பண்டி மன் தென்னன், பாண்டியற்கு ஆகவே.

11. அப்பன், ஆலவாய் ஆதி, அருளினால்
வெப்பம் தென்னவன் மேல் உற, மேதினிக்கு
ஒப்ப, ஞானசம்பந்தன் உரை பத்தும்
செப்ப வல்லவர், தீது இலாச் செல்வரே.

திருச்சிற்றம்பலம்

14. கடன் தொல்லைகள் நீங்கி, மன நிம்மதியுடன் வாழ்வதற்கும், பிறரிடமிருந்து கடன் பெருமலே போதிய பொருளாதாரத்துடன் வாழ்வதற்கும் ஓதவேண்டிய பதிகம்

பண்: பழம்பஞ்சுரம் (3–108) இராகம்: சங்கராபரணம்

திருச்சிற்றம்பலம்

1. வேத வேள்வியை நிந்தனை செய்து உழல்
ஆதம் இல்லி அமணொடு தேரரை
வாதில் வென்று அழிக்கத் திரு வுள்ளமே?
பாதி மாதுடன் ஆய பரமனே.
ஞாலம் நின் புகழே மிக வேண்டும், தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே.

2. வைதிகத்தின்வழி ஒழுகாத அக்
கைதவம் உடைக் கார் அமண் தேரரை
எய்தி, வாது செயத் திருவுள்ளமே?
மைதிகழ் தரு மாமணி கண்டனே,
ஞாலம் நின்புகழே மிக வேண்டும், தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே.

3. மறை வழக்கம் இலாத மாபாவிகள்
பறி தலைக் கையர், பாய் உடுப்பார்களை
முறிய வாது செயத் திருவுள்ளமே?
மற உலாம் கையில் மா மழுவாளனே,
ஞாலம் நின் புகழே மிக வேண்டும், தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே.

4. அறுத்த அங்கம் ஆறு ஆயின நீர்மையைக்
கறுத்த வாழ் அமண் கையர்கள் தம்மொடும்
செறுத்து, வாது செயத் திரு வுள்ளமே?
முறித்த வாண் மதிக் கண்ணி முதல்வனே.
ஞாலம் நின் புகழே மிக வேண்டும், தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே.

5. அந்தணாளர் புரியும் அருமறை
சிந்தை செய்யா அருகர் திறங்களைச்
சிந்த, வாது செயத் திருவுள்ளமே?
வெந்தநீறு அது அணியும் விகிர்தனே,
ஞாலம் நின் புகழே மிக வேண்டும், தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே.

6. வேட்டு வேள்வி செயும் பொருளை விளி
மூட்டு சிந்தை முருட்டு அமண் குண்டரை
ஓட்டி வாது செயத் திருவுள்ளமே?
காட்டில் ஆனை உரித்த எம் கள்வனே.
ஞாலம் நின் புகழே மிக வேண்டும், தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே.

7. அழல் அது ஓம்பும் அருமறையோர் திறம்
விழல் அது என்னும் அருகர் திறத்திறம்
கழல, வாது செயத் திருவுள்ளமே?
தழல் இலங்கு திருவுருச் சைவனே,
ஞாலம் நின் புகழே மிக வேண்டும், தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே.

8. நீற்று மேனியர் ஆயினர் மேல் உற்ற
காற்றுக் கொள்ளவும் நில்லா அமணரைத்
தேற்றி, வாது செயத் திருவுள்ளமே?
ஆற்ற வாள் அரக்கற்கும் அருளினுய்,
ஞாலம் நின்புகழே மிக வேண்டும், தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே.

9. நீலமேனி அமணர் திறத்து நின்
சீலம் வாது செயத் திருவுள்ளமே?
மாலும் நான்முகனும் காண்பு அரியதோர்
கோலம் மேனியது ஆகிய குன்றமே,
ஞாலம் நின்புகழே மிக வேண்டும், தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே.

10. அன்று முப்புரம் செற்ற அழக நின்.
துன்று பொற்கழல் பேணு அருகரைத்
தென்ற வாது செயத் திருவுள்ளமே?
கன்று சாக்கியர் காணுத் தலைவனே,
ஞாலம் நின்புகழே மிகவேண்டும், தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே.

11. கூடல் ஆலவாய்க் கோனை விடைகொண்டு
வாடல் மேனி அமணரை வாட்டிட,
மாடக் காழிச் சம்பந்தன், மதித்த இப்
பாடல் வல்லவர், பாக்கிய வாளரே.

திருச்சிற்றம்பலம்

15. இரத்த அழுத்த நோய் (Blood Pressure), இனிப்பிலி நோய் (நீரிழவு – Diabetes) முதலிய நோய்கள் நீங்குவதற்கும், மூர்ச்சை நோயிலிருந்து எழுவதற்கும் (To get relieved from COMA) ஓதவேண்டிய பதிகம்.

இக்காலத்தில் போதைப் பொருள்களுக்கு அடிமையாகி மீள இயலாமல் இருப்பவர்களை மீட்பதற்கும் (To save the drug addict) இந்தப் பதிகத்தை ஓதிப் பயன் பெற்றுள்ளனர்.

பண்: தக்கராகம் (1–44) இராகம்: காம்போதி

திருச்சிற்றம்பலம்

1. துணிவளர் திங்கள் துளங்கி விளங்க,
சுடர்ச்சடை சுற்றி முடித்து,
பணிவளர் கொள்கையர் பாரிடம் சூழ,
ஆரிடமும் பலி தேர்வர்;
அணிவளர் கோலம் எலாம் செய்து,
பாச்சிலாச் சிராமத்து உறைகின்ற
மணிவளர் கண்டரோ, மங்கையை வாட
மயல் செய்வதோ, இவர்மாண்பே?

2. கலைபுனை மான்உரி – தோல் உடை ஆடை,
கனல் சுடரால் இவர்கண்கள்,
தலைஅணி சென்னியர், தார்அணி மார்பர்,
தம்அடிகள் இவர் என்ன
அலைபுனல் பூம்பொழில் சூழ்ந்து அமர்
பாச்சிலாச் சிராமத்து உறைகின்ற
இலைபுனை வேலரோ, ஏழையை வாட,
இடர் செய்வதோ, இவர் ஈடே?

3. வெஞ்சுடர் ஆடுவர், துஞ்சுஇருள்;
மாலை வேண்டுவர், பூண்பது வெண்நூல்;
நஞ்சு அடை கண்டர்; நெஞ்சு
இடமாக நண்ணுவர், நம்மை நயந்து
மஞ்சு அடைமாளிகை, சூழ்தரு
பாச்சிலாச் சிராமத்து உறைகின்ற
செஞ்சுடர் வண்ணரோ, பைந்தொடி
வாடச் சிதை செய்வதோ இவர் சீரே?

4. கன மலர்க் கொன்றை அலங்கல்
இலங்க கனல்தரு தூ மதிக் கண்ணி
புனமலர் மாலை அணிந்து, அழகு
ஆய புனிதர் கொல்ஆம், இவர் என்ன,
அனம் மலி வண்பொழில் சூழ்தரு
பாச்சிலாச் சிராமத்து உறைகின்ற
மனம் மலி மைந்தரோ மங்கையை
வாட மயல் செய்வதோ, இவர் மாண்பே?

5. மாந்தர்தம் பால் நறுநெய் மகிழ்ந்து
ஆடி, வளர் சடைமேல் புனல்வைத்து
மோந்தை, முழா, குழல், தாளம் ஓர்
வீணை முதிர ஓர் வாய்மூரி பாடி,
ஆந்தை விழிச் சிறு பூதத்தர்,
பாச்சிலாச் சிராமத்து உறைகின்ற
சாந்து அணி மார்பரோ, தையலை வாடச்
சதுர் செய்வதோ, இவர் சார்வே?

6. நீறு மெய் பூசி, நிறை சடை தாழ,
நெற்றிக் கண்ணால் உற்றுநோக்கி
ஆறு அது சூடி, ஆடு அரவு ஆட்டி,
ஐவிரல் கோவண ஆடை

பால்தரு மேனியர், பூதத்தர்,
பாச்சிலாச் சிராமத்து உறைகின்ற
ஏறுஅது ஏறியர், ஏழையை வாட, இடர்
செய்வதோ இவர் ஈடே?

7. பொங்கு இள நாகம், ஏர் ஏகவடத்தோடு
ஆமை வெண்நூல், புனைகொன்றை
கொங்கு இள மாலை புனைந்து அழகு ஆய,
குழகர் கொல் ஆம், இவர் என்ன
அங்கு இள மங்கை ஓர் பங்கினர்;
பாச்சிலாச் சிராமத்து உறைகின்ற
சங்குஒளி வண்ணரோ, தாழ்குழல் வாடச்
சதிர் செய்வதோ இவர்சார்வே?

8. ஏவலத்தால் விசயற்கு அரள் செய்து,
இராவணன் தன்னை ஈடு அழித்து,
மூவரிலும் முதல் ஆய், நடு ஆய
மூர்த்தியை அன்றி மொழியாள்;
யாவர்களும் பரவும் எழில்
பாச்சிலாச் சிராமத்து உறைகின்ற
தேவர்கள் தேவரோ, சேயிழை வாடச்
சிதை செய்வதோ, இவர் சேர்வே?

9. மேலது நான்முகன் எய்தியது இல்லை;
கீழது சேவடி தன்னை
நீலது வண்ணனும் எய்தியது இல்லை;
என இவர் நின்றதும் அல்லால்
ஆல்அது மாமதி தோய்பொழில்
பாச்சிலாச் சிராமத்து உறைகின்ற
பால்அது வண்ணரோ பைந்தொடி வாடப்
பழிசெய்வதோ, இவர் பண்பே?

10. நாஞெடு கூடிய சாயினரேனும் நகுவர்,
அவர் இருபோதும்;
ஊஞெடு கூடிய உட்கும் தகையார் உரைகள்
அவை கொள வேண்டா;
ஆஞெடு பெண்வடிவு ஆயினர்,
பாச்சிலாச் சிராமத்து உறைகின்ற
பூண்நெடு மார்பரோ, பூங்கொடி வாடப்
புனே செய்வதோ, இவர் பொற்பே?

11. அகம்மலி அன்பொடு தொண்டர் வணங்க,
ஆச்சிராமத்து உறைகின்ற
புகைமலி மாலே புனேந்து, அழகு ஆய
புனிதர் கொல் ஆம் இவர் என்ன,
நகைமலி தண் பொழில் சூழ்தரு
காழி நற்றமிழ் ஞானசம்பந்தன்
தகைமலி தண்தமிழ் கொண்டு இவை
ஏத்த, சாரகிலா வினேதானே.

திருச்சிற்றம்பலம்

16. *தீராத வயிற்றுவலி நீங்குவதற்கும், குடல் தொடர்பான அனைத்துத் தொல்லைகளைப் போக்குவதற்கும் ஓத வேண்டிய பதிகம். மஞ்சள் காமாலை நோயைப் (Pancreas - Problem) போக்குவதற்கும் இந்தப் பதிகத்தைப் படனம் செய்யவும்.*

பண்: கொல்லி (4–1) இராகம்: நவரோசு

திருச்சிற்றம்பலம்

1. கூற்று ஆயினவாறு விலக்ககிலீர்;
கொடுமை பலசெய்தன நான் அறியேன்;
ஏற்றா், அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன், எப்பொழுதும்
தோற்றாது என் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன்; அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே.

2. நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்;
நினையாது ஒருபோதும் இருந்து அறியேன்;
வஞ்சம் இது ஒப்பது கண்டு அறியேன்;
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சு ஆகி வந்து என்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்தும்இடீர்;
'அஞ்சேலும்' என்னீர்; அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே.

3. பணிந்தாரன பாவங்கள் பாற்ற வல்லீர்;
படுவெண் தலையில் பலி கொண்டு உழல்வீர்;
துணிந்தே உமக்கு ஆட்செய்து வாழல் உற்றால்
சுடுகின்றது சூலை; தவிர்த்து அருளீர்;
பிணிந்தார் பொடி கொண்டு மெய் பூச வல்லீர்;
பெற்றம் ஏற்று உகந்தீர்; சுற்றும் வெண்தலை
கொண்டு
அணிந்தீர்; அடிகேள், அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே.

4. முன்னம் அடியேன் அறியாமையினன் முனிந்து,
என்னை நலிந்து முடக்கியிடப்
பின்னை, அடியேன் உமக்கு ஆளும் பட்டேன்;
சுடுகின்றது சூலை தவிர்த்து அருளீர்;
தன்னை அடைந்தார் வினை தீர்ப்பது அன்றோ
தலை ஆயவர் தம்கடன் ஆவதுதான்?
அன்னம் நடையார் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே.

5. கரத்து ஆள்பவர் காவல் இகழ்ந்தமையால்,
கரைநின்றவர் 'கண்டுகொள்' என்றுசொல்லி,
நீத்து ஆய கயம் புக நூக்கியிட, நிலைக்கொள்ளும்
வழித்துறை ஒன்று அறியேன்;
வார்த்தை இது ஒப்பது கேட்டு அறியேன்,
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார், புனல் ஆர் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே.

6. சலம் பூவொடு தூபம் மறந்து அறியேன்;
தமிழோடு இசைபாடல் மறந்து அறியேன்;
நலம்தீங்கிலும் உன்னை மறந்து அறியேன்;
உன்நாமம் என்நாவில் மறந்து அறியேன்;

உலந்தார் தலையில் பலிகொண்டு உழல்வாய்;
உடலுள் உறுசூலை தவிர்த்து அருளாய்;
அலைந்தேன் அடியேன்; அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே.

7. உயர்ந்தேன் மனைவாழ்க்கையும் ஒண்பொருளும்
ஒருவர் தலை காவல் இலாமையினால்;
வயந்தே உமக்கு ஆட்செய்து வாழல்உற்றால்,
வலிக்கின்றது சூலை தவிர்த்து அருளீர்;
பயந்தே என்வயிற்றின் அகம்படியே
பறித்துப் புரட்டி அறுத்து ஈர்த்திட,நான்
அயர்ந்தேன், அடியேன்; அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே.

8. வலித்தேன் மனைவாழ்க்கை, மகிழ்ந்து அடியேன்
வஞ்சம் மனம் ஒன்றும் இலாமையினால்;
சலித்தால் ஒருவர் துணை யாரும் இல்லை;
சங்கவெண் குழைக் காதுஉடை எம்பெருமான்
கலித்தே என் வயிற்றின் அகம்படியே
கலக்கி மலக்கிட்டுக் கவர்ந்து தின்ன
அலுத்தேன் அடியேன்; அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே.

9. பொன்போல மிளிர்வது ஓர் மேனியினீர்;
புரிபுன் சடையீர்; மெலியும் பிறையீர்;
துன்பே, கவலை, பிணி என்று இவற்றை
நணுகாமல் துரந்து கரந்தும் இடீர்;
என்போலிகள் உம்மை இனித் தெளியார்,
அடியார் படுவது இதுவே ஆகில்,
அன்பே அமையும்; அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே.

10. போர்த்தாய், அங்குஓர் ஆனையின் ஈர்உரிதோல்,
புறங்காடு அரங்கா, நடம்ஆட வல்லாய்;
ஆர்த்தான் அரக்கன்தனை மால்வரைக் கீழ்
அடர்த்திட்டு, அருள் செய்தஅது கருதாய்;
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்
என்வேதனை ஆன விலக்கியிடாய்;
ஆர்த்துஆர் புனல்சூழ் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே.

திருச்சிற்றம்பலம்

17. *எலும்பு முறிவு குணம் அடைவதற்கும், இளம்பிள்ளை வாதம்* (poliomyelitis), *பக்கவாதம்* (Paralysis) *போன்ற நோய்கள் தீர்வதற்கும் ஓதவேண்டிய பதிகம்*

பண்: சாதாரி (3–72) இராகம்: பந்துவராளி

திருச்சிற்றம்பலம்

1. விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள்
பாடல்விளை யாடல் அரவம்,
மங்குலொடு நீள் கொடிகள் மாடம்மலி
நீடுபொழில் மாகறல் உளான்
கொங்கு விரி கொன்றையொடு கங்கை வளர்
திங்கள் அணி செஞ்சடையினான்;
செங்கண் விடை அண்ணல் அடி சேர்பவர்கள்
தீவினைகள் தீரும் உடனே.

2. கலையின் ஒலி மங்கையர்கள் பாடல் ஒலி
ஆடல் கவின் எய்தி அழகு ஆர்
மலையின் நிகர் மாடம் உயர் நீள்கொடிகள்
வீசும் மலி மாகறல் உளான்;
இலையின் மலி வேல் நுனைய சூலம் வலன்
ஏந்தி எரி புன்சடையினுள்
அலைகொள் புனல் ஏந்து பெருமான், அடியை
ஏத்த வினை அகலும் மிகவே.

3. காலையொடு துந்துபிகள் சங்கு, குழல்,
யாழ், முழவு காமருவு சீர்
மாலை வழி பாடுசெய்து மாதவர்கள்
ஏத்தி மகிழ் மாகறல் உளான்
தோலை உடை பேணி அதன் மேல் ஓர்சுடர்
நாகம் அசையா அழகிதாப்
பாலை அன நீறுபுனை வான், அடியை
ஏத்த வினை பறையும் உடனே.

4. இங்கு கதிர் முத்தினொடு பொன்மணிகள்
உந்தி எழில் மெய்யுள் உடனே
மங்கையரும் மைந்தர்களும் மன்னுபுனல்
ஆடி மகிழ் மாகறல் உளான்
கொங்கு வளர் கொன்றை குளிர் திங்கள் அணி
செஞ்சடையினான் அடியையே
நுங்கள் வினை தீரமிக ஏத்தி வழி
பாடு நுகரா எழுமினே.

5. துஞ்சு நறு நீலம் இருள் நீங்க ஒளி
தோன்றும் மது வார் கழனிவாய்,
மஞ்சுமலி பூம்பொழிலில் மயில்கள் நடம்
ஆடல் மலி மாகறல் உளான்;

வஞ்சமத யானைஉரி போர்த்து மகிழ்
        வான் ஓர் மழுவாளன் வளரும்
நஞ்சம் இருள் கண்டம் உடை நாதன் அடி
        யாரை நலியா வினைகளே.

6. மன்னும் மறை யோர்களொடு பல்படிம
        மாதவர்கள் கூடி உடன் ஆய்
இன்ன வகை யால்இனிது இறைஞ்சி, இமையோரில்
        எழு மாகறல் உளான்
மின்னை விரி புன்சடையின் மேல் மலர்கள்
        கங்கையொடு திங்கள் எனவே
உன்னுமவர் தொல் வினைகள் ஒல்க உயர்
        வான் உலகம் ஏறல் எளிதே.

7. வெய்யவினை நெறிகள் செல வந்து அணையும்
        மேல் வினைகள் வீட்டல் உறுவீர்,
மைகொள் விரி கானல் மது வார்கழனி
        மாகறல் உளான் எழில் அது ஆர்
கையகரி கால் வரையில் மேலது உரிதோல்
        உடையமேனி அழகு ஆர்
ஐயன்அடி சேர்பவரை அஞ்சி அடையா
        வினைகள் அகலும் மிகவே.

8. தூசு துகில் நீள்கொடிகள் மேகமொடு
        தோய்வன பொன் மாடமிசையே
மாசுபடு செய்கை மிக மாதவர்கள்
        ஓதிமலி மாகறல் உளான்
பாசுபத இச்சை வரி நச்சு அரவு
        கச்சை உடை பேணி அழகுஆர்
பூசுபொடி ஈசன் என ஏத்தவினை
        நிற்றல் இல, போகும் உடனே.

9. தூய விரி தாமரைகள் நெய்தல் கழு
நீர் குவளை தோன்ற மது உண்
பாய வரி வண்டுபல பண்முரலும்
ஓசைபயில் மாகறல் உளான்
சாய விரல் ஊன்றிய இராவணன்
தன்மை கெட நின்ற பெருமான்
ஆய புகழ் ஏத்தும் அடியார்கள் வினை
ஆயினவும் அகல்வது எளிதே.

10. காலின் நல பைங்கழல்கள் நீள்முடியின்
மேல் உணர்வு காமுறவினுர்
மாலும் மலரானும் அறியாமை எரி
ஆகி உயர் மாகறல் உளான்
நாலும் எரி தோலும் உரி மா மணிய
நாகமொடு கூடி உடனுய்
ஆலும் விடை ஊர்தி உடை அடிகள்
அடியாரை அடையா வினைகளே.

11. கடைகொள் நெடு மாடம் மிக ஓங்குகமழ்
வீதி மலி காழியவர் கோன்,
அடையும் வகை யால், பரவி அரனை அடி
கூடு சம்பந்தன் உரையால்,
மடைகொள் புனலோடு வயல் கூடு பொழில்
மாகறல் உளான் அடியையே
உடையதமிழ் பத்தும் உணர் வார் அவர்கள்
தொல்வினைகள் ஒல்கும் உடனே.

திருச்சிற்றம்பலம்

ஏழாம் பாவம்

17. சர்ப்பதோஷத்தால் திருமணம் தள்ளிப் போவதைத் தவிர்ப்பதற்கு ஓதவேண்டிய பதிகம்

பண்: இந்தளம் (2–18) இராகம்: நாதநாமக்கிரியை

திருச்சிற்றம்பலம்

1. சடையாய் எனுமால்; சரண்நீ எனுமால்;
விடையாய் எனுமால்; வெருவா விழுமால்;
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ, இவள் உள் மெலிவே

2. சிந்தாய் எனுமால்; சிவனே எனுமால்;
முந்தாய் எனுமால்; முதல்வா எனுமால்;
கொந்து ஆர் குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ இவள் ஏசறவே.

3. அறையார் கழலும் அழல்வாய் அரவும்
பிறையார் சடையும் உடையாய், பெரிய
மறையார் மருகல் மகிழ்வாய் இவளை
இறையார் வளை கொண்டு எழில் வவ்விளையே.

4. ஒலி நீர் சடையில் கரந்தாய், உலகம்
பலி நீ திரிவாய், பழி இல் புகழாய்
மலி நீர் மருகல் மகிழ்வாய், இவளை
மெலி நீர் மையள் ஆக்கவும் வேண்டினையே

5. துணி நீலவண்ணம் முகில் தோன்றியன்ன
மணி நீலகண்டம் உடையாய் மருகல்
கணி நீலவண்டு ஆர் குழலாள் இவள்தன்
அணி நீலஒண்கண் அயர்வு ஆக்கினையே.

6. பலரும் பரவப் படுவாய் சடைமேல்
மலரும் பிறை ஒன்று உடையாய் மருகல்
புலரும் தனையும் துயிலாள் புடைபோந்து
அலரும் படுமோ அடியாள் இவளே.

7. வழுவாள் பெருமான் கழல்வாழ்க எனா
எழுவாள் நினைவாள் இரவும் பகலும்
மழுவாள் உடையாய் மருகல் பெருமான்
தொழுவாள் இவளைத் துயர் ஆக்கினையே.

8. இலங்கைக்கு இறைவன் விலங்கல் எடுப்பத்
துலங்கவ் விரல் ஊன்றலும் தோன்றலனாய்
வலங்கொள் மதில்சூழ் மருகல் பெருமான்
அலங்கல் இவளை அலர் ஆக்கினையே.

9. எரிஆர் சடையும் மடியும் இருவர்
தெரியாதது ஓர் தீத்திரள் ஆயவனே
மரியார் பிரியா மருகல் பெருமான்
அரியாள் இவளை அயர்வு ஆக்கினையே.

10. அறிவுஇல் சமணும் அலர் சாக்கியரும்
நெறிஅல்லன செய்தனர், நின்று உழல்வார்;
மறிஏந்து கையாய்; மருகல் பெருமான்
நெறியார் குழலி நிறை நீக்கினையே.

11. வயஞானம் வல்லார் மருகல் பெருமான்
உயர்ஞானம் உணர்ந்து அடி உள்குதலால்
இயல்ஞான சம்பந்தன் பாடல் வல்லார்
வியன்ஞாலம் எல்லாம் விளங்கும் புகழே.

திருச்சிற்றம்பலம்

18. தடைப்படும் திருமணம் சடுதியில் கூடிவருவதற்கு ஓதவேண்டிய பதிகம்

பண்: சாதாரி (3–78) இராகம்: பந்துவராளி

திருச்சிற்றம்பலம்

1. நீறுவரி ஆடுஅரவொடு ஆமை மனவு
என்புநிரை பூண்பர் இடபம்
ஏறுவர் யாவரும் இறைஞ்சு கழல்
ஆதியர் இருந்த இடம் ஆம்
தாறுவிரி பூகம்மலி வாழை விரை
நாறஇணை வாளை மடுவில்
வேறுபிரியாது விளையாட வளம்
ஆகும் வயல் வேதி குடியே.

2. சொற்பிரிவு இலாதமறை பாடி நடம்
ஆடுவர் தொல் ஆனை உரிவை
மற்புரி புயத்து இனிது மேவுவர் எந்
நாளும்வளர் வானவர் தொழத்
துற்புஅரிய நஞ்சு அமுதமாக முன்அயின்றவர்
இயன்ற தொகுசீர்
வெற்புஅரையன் மங்கைஒரு பங்கர்நகர்
என்பர்திரு வேதிகுடியே.

3. போழும்மதி பூண்அரவு கொன்றை மலர்
துன்றுசடை வென்றி புகமேல்
வாழும்நதி தாழும் அருளாளர் இருள்
ஆர்மிடறர் மாதர் இமையோர்
சூழும்இரவாளர் திருமார்பில் விரிநூலர்
வரிதோலர் உடைமேல்
வேழஉரி போர்வையினர் மேவுபதி
என்பர்திரு வேதிகுடியே.

4. காடர்கரி காலர்கனல் கையர் அனல்
மெய்யர்உடல் செய்யர் செவியில்
தோடர் தெரி கீளர்சரி கோவணவர்
ஆவணவர் தொல்லை நகர்தான்
பாடல் உடையார்கள் அடியார்கள்
மலரோடு புனல் கொண்டு பணிவார்
வேடம் ஒளி ஆனபொடி பூசிஇசை
மேவுதிரு வேதிகுடியே.

5. சொக்கர் துணை மிக்க எயில் உக்கு அற
முனிந்து தொழும் மூவர் மகிழத்
தக்க அருள் பக்கம் உற வைத்த அரனூர்
இனிது தங்கும் நகர்தான்
கொக்கு அரவம் உற்ற பொழில் வெற்றி நிழல்
பற்றி வரி வண்டு இசை குலாம்
மிக்கு அமரர் மெச்சி இனிது அச்சம் இடர்
போக நல்கு வேதி குடியே.

6. செய்யதிரு மேனிமிசை வெண்பொடி அணிந்து
கருமான் உரிவை போர்த்து
ஐயம் இடும் என்று மட மங்கை யொடு
அகம் திரியும் அண்ணல் இடமாம்
வையம் விலை மாறிடினும் ஏறுபுகழ்
மிக்கு இழிவு இலாதவகையார்
வெய்ய மொழி தண்புலவருக்கு உரை
செயாத அவர் வேதி குடியே.

7. உன்னி இரு போதும் அடி பேணும் அடி
யார் தம் இடர் ஒல்க அருளி
துன்னி ஒரு நால்வருடன் ஆல் நிழல்
இருந்த துணை வன்தன் இடமாம்.

கன்னிய ரொடு ஆடவர்கள் மாமணம்
விரும்பி அரு மங்கலம் மிக
மின் இயலும் நுண்இடை நல் மங்கையர்
இயற்று பதி வேதிகுடியே.

8. உரக்கரம் நெருப்பு எழ நெருக்கி வரை
பற்றிய ஒருத்தன் முடிதோள்
அரக்கனை அடர்த்தவன் இசைக்கு இனிது
நல்கி அருள் அங்கணன் இடம்
முருக்கு இதழ் மடக்கொடி மடந்தையரும்
ஆடவரும் மொய்த்த கலவை
விரைக்குழல் மிகக்கமழ விண்இசை
உலாவுதிரு வேதிகுடியே.

9. பூவின்மிசை அந்தணனொடு ஆழிபொலி
அங்கையனும் நேட எரிஆய்
தேவும்இவர் அல்லர் இனி யாவர்என
நின்று திகழ் கின்றவர்இடம்
பாவலர்கள் ஓசை இயல் கேள்விஅது
அருத கொடையாளர் பயில்வாம்
மேவுஅரிய செல்வம்நெடு மாடம் வளர்
வீதி நிகழ் வேதிகுடியே.

10. வஞ்சஅமணர் தேரர் மதிகேடர் தம்மனத்து
அறிவிலாதவர் மொழி
தஞ்சம்என என்றும் உணராத அடியார்
கருது சைவன் இடமாம்
அஞ்சுபுலன் வென்று அறுவகைப் பொருள்
தெரிந்துஎழு இசைக்கிளவியால்
வெஞ்சினம் ஒழித்தவர்கள் மேவி
நிகழ்கின்ற திருவேதிகுடியே.

11. கந்தம்மலி தண்பொழில் நல்மாடம் மிடை
காழி வளர் ஞானம் உணர்சம்
பந்தன்மலி செந்தமிழின் மாலைகொடு
வேதி குடி ஆதி கழலே
சிந்தைசெய வல்லவர்கள் நல்லவர்கள்
என்ன நிகழ்வு எய்தி இமையோர்
அந்த உலகு எய்தி அரசு ஆளும் அதுவே
சரதம் ஆணை நமதே.

திருச்சிற்றம்பலம்

19. தாம்பத்திய உறவு முழு நிறைவுடன் நடைபெறுவதற்கும், தம்பதிகளுக்குள்ளே உள்ள பிணக்கு தீர்ந்து ஒற்றுமையாக வாழ்வதற்கும் ஓதவேண்டிய பதிகம்

பண்: இந்தளம் (2–16)இராகம்: நாதநாமக்கிரியை

திருச்சிற்றம்பலம்

1. அயில் ஆரும் அம்பு அதனுல் புரம் மூன்று எய்து
குயில் ஆரும் மென்மொழியாள் ஒருகூறு ஆகி
மயில் ஆரும் மல்கிய சோலை மணஞ்சேரிப்
பயில்வானைப் பற்றி நின்றூர்க்கு இல்லை, பாவமே.

2. விதியானை விண்ணவர்தாம் தொழுது ஏத்திய
நெதியானை நீள் சடைமேல் நிகழ்வித்த வான்
மதியானை வண் பொழில் சூழ்ந்த மணஞ்சேரிப்
பதியானைப் பாட வல்லார் வினை பாறுமே.

3. எய்ப்பு ஆனூர்க்கு இன்புறு தேன் அளித்து ஊறிய
இப்பால் ஆய் எனையும் ஆள உரியானை
வைப்பான மாடங்கள் சூழ்ந்த மணஞ்சேரி
மெய்ப்பானை மேவிநின்றார் வினை வீடுமே.

4. விடையானை மேல் உலகு ஏழும் இப்பார் எல்லாம்
உடையானை ஊழி தோறுஊழி உளதுஆய
படையானை பண்இசை பாடு மணஞ்சேரி
அடைவானை அடைய வல்லார்க்கு இல்லை, அல்லலே.

5. எறி ஆர் பூங்கொன்றையினோடும் இளமத்தும்
வெறி ஆரும் செஞ்சடை ஆர மிலைத்தானை
மறி ஆரும் கை உடையானை மணஞ்சேரிச்
செறிவானைச் செப்ப வல்லார்க்கு இடர் சேராவே.

6. மொழியானை முன்ஒரு நால்மறை ஆறுஅங்கம்
பழியாமைப் பண்இசை ஆன பகர்வானை
வழியானை வானவர் ஏத்தும் மணஞ்சேரி
இழியாமை ஏத்த வல்லார்க்கு எய்தும் இன்பமே.

7. எண்ணானை எண் அமர்சீர் இமையோர்கட்குக்
கண்ணானை, கண் ஒரு மூன்றும் உடையானை
மண்ணானை மாவயல் சூழ்ந்த மணஞ்சேரிப்
பெண்ணானைப் பேச நின்றார் பெரியோர்களே.

8. எடுத்தானை எழில் முடி எட்டும் இரண்டும் தோள்
கெடுத்தானை, கேடு இலாச் செம்மை உடையானை
மடுத்தார வண்டு இசைபாடும் மணஞ்சேரி
பிடித்து ஆரப் பேண வல்லார், பெரியோர்களே.

9. சொல்லானைத் தோற்றம் கண்டானும் நெடுமாலும்
கல்லானைக் கற்றன சொல்லித் தொழுது ஓங்க
வல்லார், நல் மாதவர் ஏத்தும் மணஞ்சேரி
எல்லாம் ஆம் எம்பெருமான், கழல் ஏத்துமே.

10. சற்றேயும் தாம் அறிவுஇல் சமண் சாக்கியர்
சொற்றேயும் வண்ணம் ஓர் செம்மை உடையானே
வற்றாத வாவிகள் சூழ்ந்த மணஞ்சேரி
பற்றாக வாழ்பவர்மேல் வினை பற்றாவே.

11. கண் ஆரும் காழியர்கோன் கருத்து ஆர்வித்த
தண் ஆர் சீர் ஞானசம்பந்தன் தமிழ்மாலை
மண் ஆரும் மாவயல் சூழ்ந்த மணஞ்சேரி
பண்ஆரப் பாடவல்லார்க்கு இல்லை, பாவமே.

திருச்சிற்றம்பலம்

எட்டாம் பாவம்

21. சகல கிரக பீடைகள் நீங்குவதற்கும் ஆயுள் பலம் பெருகுவதற்கும் ஓதவேண்டிய பதிகம்

பண்: பியந்தைக் காந்தாரம் (2–85) இராகம்: நவரோசு

திருச்சிற்றம்பலம்

1. வேயுறு தோளி பங்கன் விடம் உண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி,
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து, என்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழம், வெள்ளி,
சனி, பாம்பு இரண்டும் உடனே
ஆசுஅறும்; நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே.

2. என்பொடு கொம்பொடு ஆமை இவை மார்பு இலங்க
எருது ஏறி, ஏழை உடனே,
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்து, என்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொடு ஒன்றோடு ஏழு பதினெட்டொடு, ஆறும்.
உடனாய நாள்கள் அவைதாம்,
அன்பொடு நல்லநல்ல; அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

3. உருவளர் பவளமேனி ஒளிநீறு அணிந்து
உமையோடும், வெள்ளை விடைமேல்,
முருகு அலர்கொன்றை திங்கள் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்,
திருமகள், கலை அது ஊர்தி, செயமாது, பூமி,
திசை தெய்வம் ஆன பலவும்,
அருநெதி நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே.

4. மதி நுதல் மங்கையோடு, வடஆல் இருந்து
மறை ஓதும் எங்கள் பரமன்,
நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்து, என்
உளமே புகுந்த அதனால்
கொதி உறு காலன், அங்கி, நமனோடு தூதர்
கொடு நோய்கள் ஆனபலவும்,
அதிகுணம் நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே.

5. நஞ்சு அணி கண்டன், எந்தை, மடவாள்தனோடும்
விடை ஏறும், நங்கள் பரமன்,
துஞ்சு இருள், வன்னி, கொன்றை முடிமேல் அணிந்து
என்
உளமே புகுந்த அதனால்

வெஞ்சின அவுணரோடும், உரும்-இடியும், மின்னும்
மிகையான பூதம் அவையும்,
அஞ்சிடும், நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே.

6. வாள்வரி அதள்அது ஆடைவரி கோவணத்தர்
மடவாள்தனோடும் உடன்ஆய்,
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்து, என்
உளமே புகுந்த அதனால்,
கோள்அரி, உழுவையோடு, கொலையானை கேழல்,
கொடு நாகமோடு, கரடி,
ஆள் அரி, நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே.

7. செப்பு இளமுலை நல்மங்கை ஒருபாகமாக
விடைஏறு செல்வன் அடைவார்
ஒப்புஇள மதியும் அப்பும் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
வெப்போடு, குளிரும் வாதம், மிகையான பித்தும்,
வினையான வந்து நலியா,
அப்படி நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே.

8. வேள்பட விழிசெய்து அன்று, விடைமேல் இருந்து
மடவாள்தனோடும் உடனாய்,
வாள்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்து, என்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ் இலங்கை அரையன் தனோடும்
இடர்ஆன வந்து நலியா;
ஆழ்கடல் நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே.

9. பலபல வேடம் ஆகும்பரன், நாரிபாகன்,
பசு ஏறும் எங்கள் பரமன்,
சலமகளோடு எருக்கு முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்,
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகாலம் ஆன பலவும்
அலைகடல், மேரு நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே.

10. கொத்து அலர் குழலியோடு விசயற்கு நல்கு
குணம் ஆய வேட விகிர்தன்,
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்து, என்
உளமே புகுந்த அதனால்,
புத்தரொடு அமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே.

11. தேன் அமர் பொழில்கொள் ஆலை விளை செந்நெல்
துன்னி,
வளர் செம்பொன் எங்கும் நிகழ,
நான்முகன் ஆதி ஆய பிரமா புரத்து
மறைஞான ஞான முநிவன்,
தான் உறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரை செய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசு ஆள்வர், ஆணை நமதே.

திருச்சிற்றம்பலம்

22. எட்டாமிடத்துச் சனி (அட்டமச்சனி), ஏழரைச் சனி, கண்டச்சனி (நாலாம் இடத்துச் சனி) யினுல், வாழ்க்கையில் எதிர்பாராத இடர்ப்பாடுகள் ஏற்படாமலிருக்கும் பொருட்டு ஓதவேண்டிய பதிகம்

பண்: பழந்தக்கராகம் **(1–49)** இராகம்: சுத்தசாவேரி

திருச்சிற்றம்பலம்

1. போகம் ஆர்த்த பூண்முலையாள் தன்னேடும் பொன்னகலம்
பாகம் ஆர்த்த பைங்கண் வெள்ஏற்று அண்ணல், பரமேட்டி,
ஆகம் ஆர்த்த தோல்உடையன், கோவண ஆடையின் மேல்
நாகம் ஆர்த்த நம்பெருமான், மேயது நள்ளாறே.

2. தோடுடைய காதுஉடையன், தோல்உடையன், தொலையாப்
பீடுடைய போர்விடையன் பெண்ணும் ஓர் பாலுடையன்
ஏடுடைய மேல் உலகோடு ஏழ்கடலும் சூழ்ந்த
நாடுடைய நம்பெருமான், மேயது நள்ளாறே.

3. ஆன்முறையால் ஆற்ற வெண்நீறுஆடி, அணியிழைஓர்
பால்முறையால் வைத்த பாதம் பத்தர் பணிந்தேத்த
மான்மறியும் வெண்மழுவும் சூலமும் பற்றிய கை
நால்மறையான், நம்பெருமான், மேயது நள்ளாறே.

4. புல்க வல்ல வார்சடைமேல் பூம்புனல் பெய்து, அயலே
மல்க வல்ல கொன்றைமாலை மதியோடு உடன்சூடி,
பல்க வல்ல தொண்டர்தம் பொற்பாத நிழல்சேர,
நல்கவல்ல நம்பெருமான் மேயது நள்ளாறே.

5. ஏறுதாங்கி ஊர்திபேணி, ஏர்கொள் இளமதியம்
ஆறுதாங்கும் சென்னிமேல் ஓர் ஆடு அரவம்சூடி
நீறுதாங்கி நூல்கிடந்த மார்பில்நிரை கொன்றை
நாறுதாங்கும் நம்பெருமான் மேயது நள்ளாறே.

6. திங்கள் உச்சிமேல் விளங்கும் தேவன், இமையோர்கள்
''எங்கள் உச்சி, எம்இறைவன்'' என்று அடியே இறைஞ்ச,
தங்கள் உச்சியால் வணங்கும் தன் அடியார்கட்கு எல்லாம்
நங்கள் உச்சி நம்பெருமான், மேயது நள்ளாறே.

7. வெஞ்சுடர்த்தீ அங்கை ஏந்தி, விண்கொள் முழவுஅதிர,
அஞ்சுஇடத்து ஓர் ஆடல் பாடல் பேணுவது அன்றியும் போய்ச்,
செஞ்சடைக்கு ஓர் திங்கள் சூடி திகழ்தருகண்டத் துள்ளே
நஞ்சு அடைத்த நம்பெருமான், மேயது நள்ளாறே.

8. சிட்டம் ஆர்ந்த மும்மதிலும் சிலைவரைத்தீ அம்பினால்
சுட்டு மாட்டிச், சுண்ணவெண் நீறுஆடுவது அன்றியும், போய்ப்
பட்டம் ஆர்ந்த சென்னிமேல் ஓர் பால் மதியம்சூடி,
நட்டம்ஆடும் நம்பெருமான் மேயது நள்ளாறே.

9. உண்ணல் ஆகா நஞ்சு கண்டத்து உண்டு, உடனே ஒடுக்கி
'அண்ணல்ஆகா அண்ணல் நீழல் ஆர் அழல் போல் உருவம்
எண்ணல்ஆகா உள்வினை' என்று எள்க வலித்து இருவர்
நண்ணல்ஆகா நம்பெருமான், மேயது நள்ளாறே.

10. மாசுமெய்யர், மண்டைத்தேரர், குண்டர் குணமிலிகள்
பேசும்பேச்சை மெய்என்று எண்ணி, அந்நெறி
செல்லன்மின்,
மூசுவண்டார் கொன்றைசூடி, மும்மதிலும் உடனே
நாசம்செய்த நம்பெருமான்; மேயது நள்ளாறே.

11. தண்புனலும் வெண்பிறையும் தாங்கிய தாழ்சடையன்,
நண்புநல்லார் மல்குகாழி ஞானசம்பந்தன், நல்ல
பண்புநள்ளாறு ஏத்துபாடல் பத்தும் இவைவல்லார்
உண்புநீங்கி, வானவரோடு உலகில் உறைவாரே.

திருச்சிற்றம்பலம்

23. *எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும் ஏதாவது ஒரு தடை வருவதைத் தடுப்பதற்கும், வீண் பழி, அவமானங்களிலிருந்து விடுபடுவதற்கும் ஓத வேண்டிய பதிகம்.*

பண்: பழந்தக்கராகம் **(1–52)** இராகம்: சுத்தசாவேரி

திருச்சிற்றம்பலம்

1. மறைஉடையாய், தோல் உடையாய்,
வார்சடைமேல் வளரும்
பிறை உடையாய், பிஞ்ஞகனே, என்று
உனைப் பேசின் அல்லால்
குறை உடையார் குற்றம் ஓராய்;
கொள்கையினால் உயர்ந்த
நிறை உடையார் இடர்களையாய்;
நெடுங்களம் மேயவனே.

2. கனைத்து எழுந்த வெண்திரை
சூழ்கடலிடை நஞ்சுதன்னைத்
தினைத்தனையா மிடற்றில்வைத்த
திருந்தியதேவ, நின்னை
மனத்தகத்தோர் பாடல் ஆடல்
பேணி, இராப்பகலும்
நினைத்து எழுவார் இடர்களையாய்,
நெடுங்களம் மேயவனே.

3. நின் அடியே வழிபடுவான், நிமலா, நினைக்கருத,
'என் அடியான் உயிரை வவ்வேல்' என்று அடற் கூற்று
உதைத்த
பொன் அடியே பரவி, நாளும் பூவொடு நீர்சுமக்கும்
நின்அடியார் இடர்களையாய், நெடுங்களம் மேயவனே.

4. மலைபுரிந்த மன்னவன்தன் மகளை ஓர்பால் மகிழ்ந்தாய்
அலைபுரிந்த கங்கை தங்கும் அவிர்சடை ஆரூரா,
தலைபுரிந்த பலி மகிழ்வாய், தலைவநின்தாள் நிழற்கீழ்
நிலை புரிந்தார் இடர் களையாய், நெடுங்களம்
மேயவனே.

5. பாங்கின்நல்லார், படிமம்செய்வார், பாரிடமும் பலிசேர்
தூங்கி நல்லார் பாடலோடு, தொழுகழலே வணங்கித்
தாங்கி நில்லா அன்பினோடும், தலைவநின்தாள்
நிழற்கீழ்
நீங்கி நில்லார் இடர்களையாய், நெடுங்களம்
மேயவனே.

6. விருத்தன் ஆகி, பாலன் ஆகி, வேதம் ஓர் நான்கு
உணர்ந்து
கருத்தன் ஆகி, கங்கையாளைக் கமழ் சடைமேல்
கரந்தாய்;
அருத்தன் ஆய ஆதிதேவன் அடியிணையே பரவும்
நிருத்தர் இடர்களையாய், நெடுங்களம் மேயவனே.

7. கூறு கொண்டாய் மூன்றும் ஒன்றுகக்
கூட்டிஓர் வெங்கணையால்
மாறுகொண்டார் புரம் எரித்த
மன்னவனே, கொடிமேல்
ஏறு கொண்டாய்; சாந்தம் ஈது' என்று
எம்பெருமான் அணிந்த
நீறு கொண்டார் இடர்களையாய்,
நெடுங்களம் மேயவனே.

8. ''குன்றின் உச்சிமேல் விளங்கும்
கொடிமதில் சூழ் இலங்கை
அன்றி நின்ற அரக்கர்கோனை
அருவரைக்கீழ் அடர்த்தாய்''
என்று நல்ல வாய்மொழி யால்
ஏத்தி, இராப்பகலும்
நின்று நைவார் இடர்களையாய்,
நெடுங்களம் மேயவனே.

9. வேழவெண் கொம்பு ஒசித்த மாலும்,
விளங்கிய நான்முகனும்,
சூழ எங்கும் நேட, ஆங்கு ஓர்
சோதியுள் ஆகி நின்றாய்
கேழல் வெண்கொம்பு அணிந்த பெம்மான்
கேடுஇலாப் பொன் அடியின்
நீழல் வாழ்வார் இடர்களையாய்,
நெடுங்களம் மேயவனே.

10. வெஞ்சொல் தம்சொல் ஆக்கி நின்ற
வேடம் இலாச் சமணும்
தஞ்சம் இல்லாச் சாக்கியரும்,
தத்துவம் ஒன்று அறியார்;

துஞ்சல் இல்லா வாய்மொழியால்,
தோத்திரம் நின் அடியே
நெஞ்சில் வைப்பார் இடர்களையாய்
நெடுங்களம் மேயவனே.

11. நீடவல்ல வார்சடையான்
மேய நெடுங்களத்தைச்
சேடர்வாழும் மா மருகின்
சிரபுரக் கோன், நலத்தால்
நாடவல்ல பனுவல் மாலை
ஞானசம்பந்தன் சொன்ன
பாடல் பத்தும் பாடவல்லார்,
பாவம் பறையுமே.

திருச்சிற்றம்பலம்

24. இழந்த பொருளை மீட்டுப் பெறுவதற்கு ஓதவேண்டிய பதிகம்.

பண்: நட்டராகம் (7–25) இராகம்: பந்துவராளி

திருச்சிற்றம்பலம்

1. பொன்செய்த மேனியினீர், புலித்தோலை அரைக்கு
அசைத்தீர்;
முன்செய்த மூஎயிலும் எரித்தீர்; முதுகுன்று அமர்ந்தீர்;
மின்செய்த நுண்இடையாள் பரவை இவள்தன்
முகப்பே,
என்செய்தவாறு அடிகேள், அடியேன் இட்டளம் கெடவே

2. உம்பரும் வானவரும் உடனே நிற்கவே, எனக்குச்
செம்பொனைத் தந்தருளித், திகழும் முதுகுன்று
அமர்ந்தீர்;
வம்பு அமரும் குழலாள் பரவைஇவள் வாடுகின்றுள்;
எம்பெருமான், அருளீர்; அடியேன் இட்டளம் கெடவே.

3. பத்தா, பத்தர்களுக்கு அருள்செய்யும் பரம்பரனே,
முத்தா, முக்கணனே, முதுகுன்றம் அமர்ந்தவனே,
மைத்து ஆரும்தடங்கண் பரவைஇவள் வாடாமே,
அத்தா, தந்தருளாய், அடியேன் இட்டளம் கெடவே.

4. மங்கை ஓர்கூறு அமர்ந்தீர்; மறைநான்கும் விரித்து
உகந்தீர்;
திங்கள் சடைக்கு அணிந்தீர்; திகழும்
முதுகுன்றமர்ந்தீர்;
கொங்கை நல்லாள் பரவை, குணங்கொண்டிருந்தாள்
முகப்பே,
அங்கணனே, அருளாய், அடியேன் இட்டளம் கெடவே.

5. மையாரும் மிடற்றுய், மருவார் புரம்மூன்று எரித்த
செய்யார் மேனியனே, திகழும் முதுகுன்று அமர்ந்தாய்;
பைஆரும் அரவுஏர் அல்குலாள் இவள் வாடுகின்றுள்;
ஐயா தந்தருளாய், அடியேன் இட்டளம் கெடவே.

6. நெடியான் நான்முகனும் இரவியொடும் இந்திரனும்
முடியால் வந்துஇறைஞ்ச, முதுகுன்றம் அமர்ந்தவனே,
படிஆரும் இயலாள் பரவைஇவள்தன் முகப்பே,
அடிகேள், தந்தருளீர், அடியேன் இட்டளம் கெடவே.

7. கொந்தணவும் பொழில்சூழ் குளிர்மாமதில்
மாளிகைமேல்
வந்தணவும் மதிசேர், சடைமாமுது குன்று உடையாய்
பந்தணவும் விரலாள் பரவைஇவள் தன் முகப்பே,
அந்தணனே, அருளாய், அடியேன் இட்டளம் கெடவே.

8. பரசுஆரும் கரவா, பதினெண் கணமும்சூழ
முரசார்வந்து அதிர, முதுகுன்றம் அமர்ந்தவனே,
விரைசேரும் குழலாள், பரவைஇவள் தன்முகப்பே
அரசே தந்தருளாய், அடியேன் இட்டளம் கெடவே.

9. ஏத்தாது இருந்து அறியேன்; இமையோர்தனி
நாயகனே;
மூத்தாய், உலகுக்கு எல்லாம்; முதுகுன்றம்
அமர்ந்தவனே
பூத்தாரும் குழலாள் பரவை இவள்தன் முகப்பே,
கூத்தா, தந்தருளாய், கொடியேன் இட்டளம் கெடவே.

10. பிறைஆரும் சடைஎம்பெருமான், 'அருளாய்' என்று
முறையாய்வந்து அமரர் வணங்கும் முதுகுன்றர்
தம்மை
மறையார்தம் குரிசில், வயல்நாவல் ஆரூரன், சொன்ன,
இறையார் பாடல் வல்லார்க்கு எளிதுஆம்
சிவலோகம்அதே

திருச்சிற்றம்பலம்

ஒன்பதாம் பாவம்

25. தந்தையின் உடல் நலம், மனநலம் சீர்பெறுவதற்கும் தனக்குக் கிடைக்கவேண்டிய வாய்ப்புக்கள் நழுவாமல் இருப்பதற்கும், புண்ணியப் பயன்களைப் பெறுவதற்கும் ஓதவேண்டிய பதிகம்

பண்: வியாழக்குறிஞ்சி **(1–128)** இராகம்: சௌராஷ்டிரம்

திருச்சிற்றம்பலம்

ஓர்உரு ஆயினை; மான்ஆங் காரத்து
ஈர் இயல்பாய் ஒரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்து அளித்து அழிப்ப, மும்மூர்த்திகள் ஆயினை;
இருவரோடு ஒருவன் ஆகி நின்றனை.
ஓர்ஆல் நீழல், ஒண்கழல் இரண்டும்
முப்பொழுது ஏத்திய நால்வர்க்கு ஒளிநெறி
காட்டினை; நாட்டம் மூன்றாகக் கோட்டினை
இருநதி அரவமோடு ஒருமதி சூடினை;
ஒருதாள் ஈர்அயில் மூவிலைச் சூலம்
நாற்கால் மான் மறி, ஐந்தலை அரவம்
ஏந்தினை; காய்ந்த நால்வாய் மும்மதத்து
இருகோட்டு ஒருகரி ஈடு அழித்து உரித்தனை
ஒருதனு இருகால் வளைய வாங்கி,
முப்புரத்தோடு நானிலம் அஞ்ச,
கொன்று தலத்து உற அவுணரை அறுத்தனை
ஐம்புலன் நாலாம் அந்தக்கரணம்,
முக்குணம், இருவளி, ஒருங்கிய வானோர்
ஏத்த நின்றனை; ஒருங்கிய மனத்தோடு
இருபிறப்பு ஓர்ந்து, முப்பொழுது குறை முடித்து

நான்மறை ஓதி, ஐவகை வேள்வி
அமைத்து, ஆறு அங்கம் முதல் எழுத்து ஓதி,
வரன்முறை பயின்று, எழுவான்தனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினே;
அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினே;
இகலி அமைந்து உணர்புகலி அமர்ந்தனே;
பொங்கு நாற்கடல் சூழ்வெங்குரு விளங்கினே;
பாணி மூஉலகும் புதைய, மேல் மிதந்த
தோணிபுரத்து உறைந்தனே; தொலையா இருநிதி
வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனே;
வரபுரம் ஒன்று உணர்சிரபுரத்து உறைந்தனே;
ஒருமலை எடுத்த இருதிறல் அரக்கன்
விறல்கெடுத்து அருளினே; புறவம் புரிந்தனே;
முந்நீர்த் துயின்றேன், நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை சண்பை அமர்ந்தனே;
ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியும் உணராக் காழி அமர்ந்தனே;
எச்சன் ஏழ்இசையோன் கொச்சையை மெச்சினே;
ஆறுபதமும், ஐந்து அமர் கல்வியும்,
மறைமுதல் நான்கும்... ... ...
மூன்று காலமும், தோன்ற நின்றனே;
இருமையின் ஒருமையும், ஒருமையின் பெருமையும்
மறுஇலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை,
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்;
அனைய தன்மையை ஆதலின், நின்னை
நினைய வல்லவர் இல்லை, நீள் நிலத்தே.

திருச்சிற்றம்பலம்

பத்தாம் பாவம்

26. *வேலை இல்லாத தொல்லை நீங்குவதற்கும் பாராட்டுக்குரிய செயல்களைச் செய்து புகழைப் பெறுவதற்கும், தெய்வ வழிபாடு, புண்ணியச் செயல் முதலியவற்றில் ஈடுபாடு கூடுவதற்கும் ஓதவேண்டிய பதிகம். இது ''திருப்பாசுரம்'' எனப்படும்.*

பண்: கௌசிகம் **(3–54)** இராகம்: பயிரவி

திருச்சிற்றம்பலம்

1. வாழ்க அந்தணர், வானவர் ஆன்இனம்;
வீழ்க தண்புனல்; வேந்தனும் ஓங்குக;
ஆழ்க தீயது எல்லாம் அரன் நாமமே
சூழ்க; வையகமும் துயர் தீர்கவே.

2. அரிய காட்சியராய்த் தமது அங்கை சேர்
எரியர்; ஏறு உகந்து ஏறுவர்; கண்டமும்
கரியர்; காடு உறை வாழ்க்கையர்; ஆயினும்
பெரியர்; ஆர் அறிவார் அவர் பெற்றியே?

3. வெந்த சாம்பல் விரை எனப் பூசியே,
தந்தையாரொடு தாய் இலர்; தம்மையே
சிந்தியா எழுவார் வினை தீர்ப்பர்; ஆல்
எந்தையார் அவர் எவ்வகையார் கொலோ?

4. ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும், ஆதிமாண்பும்
கேட்பான் புகில், அளவுஇல்லை; கிளக்க வேண்டா;
கோட்பாலனவும் வினையும் குறுகாமை, எந்தை
தாள்பால் வணங்கித் தலைநின்று இவை கேட்கதக்கார்.

5. ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா; சுடர் விட்டுளன், எங்கள் சோதி;
மாதுக்கம் நீங்கல் உறுவீர்; மனம் பற்றி வாழ்மின்;
சாதுக்கள் மிக்கீர், இறையே வந்து சார்மின்களே.

6. ஆடும் எனவும் அருங்கூற்றம் உதைத்து வேதம்
பாடும் எனவும், புகழ் அல்லது பாவம் நீங்கக்
கேடும் பிறப்பும் அறுக்கும் எனக் கேட்டீர் ஆகில்
நாடும் திறத்தார்க்கு அருள் அல்லது நாட்டல்ஆமே?

7. கடிசேர்ந்த போது மலர் ஆன கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால் கொண்டு, அங்குஆட்டிட தாதைபண்டு
முடி சேர்ந்தகாலே அறவெட்டிட முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணம், அறிவார் சொலக்கேட்டும்
அன்றே

8. வேத முதல்வன் முதலாக விளங்கி வையம்
ஏதப்படாமை உலகத்தவர் ஏத்தல் செய்யப்
பூதமுதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலே என்றே கலிக்கோவை சொல்லே

9. பார் ஆழி வட்டம் பகையால் நலிந்து ஆட்ட, ஆடிப்
பேர் ஆழி ஆனது இடர்கண்டு, அருள்செய்தல் பேணி
நீர் ஆழி விட்டு ஏறி நெஞ்சுஇடம் கொண்டவர்க்குப்
போர் ஆழி ஈந்த புகழும், புகழ் உற்றது அன்றே

10. மால் ஆயவனும் மறைவல்ல நான்முகனும்
பால்ஆய தேவர் பகரில், அமுது ஊட்டல் பேணி,
கால்ஆய முந்நீர் கடைந்தார்க்கு அரிதாய் எழுந்த
ஆலாலம் உண்டு, அங்கு அமரர்க்கு அருள்செய்ததாமே

11 அற்று அன்றி அம்தண் மதுரைத் தொகை ஆக்கினுலும்
தெற்று என்று தெய்வம் தெளியார், கரைக்குஓலே
தெண்நீர்ப்
பற்றுஇன்றிப் பாங்கு எதிர்விண் ஊரவும்
பண்புநோக்கில்
பெற்ருென்று உயர்த்தபெருமான் பெருமானும் அன்றே

12. நல்லார்கள் சேர் புகலி ஞானசம்பந்தன், நல்ல
எல்லார்களும் பரவும் ஈசனே ஏத்து பாடல்,
பல்லார்களும் மதிக்கப் பாசுரம் சொன்ன பத்தும்
வல்லார்கள், வானேர் உலகு ஆளவும் வல்லர் அன்றே.

திருச்சிற்றம்பலம்

27. *தொழில் நிரந்தரம் பெற*

திருமயிலாப்பூர்

பண்: சீகாமரம் **(2–47)** இராகம்: நாதநாமக்கிரியை

திருச்சிற்றம்பலம்

மட்டுஇட்ட புன்னேஅம் கானல் மடமயிலேக்
கட்டுஇட்டம் கொண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு
அட்டுஇட்டல் காணுதே போதியோ பூம்பாவாய். 1

மைப்பயந்த ஒண்கண் மடநல்லார் மாமயிலேக்
கைப்பயந்த நீற்ருன் கபாலீச் சரம்அமர்ந்தான்
ஐப்பசி ஓண விழாவும் அருந்தவர்கள்
துய்ப்பனவும் காணுதே போதியோ பூம்பாவாய். 2

வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச் சரத்தான்தொல் கார்த்திகைநாள்
தளத்துஏந்து இளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய். 3

ஊர்திரை வேலை உலாவும் உயர்மயிலைக்
கூர்தரு வேல்வல்லார் கொற்றம்கொள் சேரிதனில்
கார்தரு சோலைக் கபாலீச் சரம்அமர்ந்தான்
ஆர்திரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய். 4

மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச்சரம் அமர்ந்தான்
நெய்ப்பூசும் ஒண்புழுக்கால் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய். 5

மடல்ஆர்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடல் ஆட்டுக் கண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான்
அடல் ஆன்ஏறு ஊரும் அடிகள் அடிபரவி
நடம் ஆடல் காணாதே போதியோ பூம்பாவாய் 6

மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனி உத்திரநாள்
ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய் 7

தண்ணா அரக்கன்தோள் சாய்த்துஉகந்த தாளினான்
கண்ஆர் மயிலைக் கபாலீச் சரம்அமர்ந்தான்
பண்ஆர் பதின்எண் கணங்கள்தம் அட்டமிநாள்
கண்ஆரக் காணாதே போதியோ பூம்பாவாய் 8

நல்தா மரைமலர்மேல் நான்முகனும் நாரணனும்
முற்றாங்கு உணர்கிலா மூர்த்தி திருவடியைக்
கற்றார்கள் ஏத்தும் கபாலீச் சரம்அமர்ந்தான்
பொன்தாப்புக் காணாதே போதியோ பூம்பாவாய் 9

உரிஞ்சுஆய வாழ்க்கை அமண், உடையைப் போர்க்கும்
இரும்சாக் கியர்கள் எழுத்துஉரைப்ப நாட்டில்
கரும்சோலை சூழ்ந்த கபாலீச் சரத்தான்தன்
பெரும்சாந்தி காணுதே போதியோ பூம்பாவாய் 10

கான்அமர் சோலைக் கபாலீச் சரம்அமர்ந்தான்
தேன்அமர் பூம்பாவைப் பாட்டுஆகச் செந்தமிழால்
ஞானசம் பந்தன் நலம்புகழ்ந்த பத்தும் வல்லார்
வானசம் பந்தத் தவரோடும் வாழ்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

பதினோராம் பாவம்

28. *செய்யும் தொழில்கள் இலாபம் பெருகுவதற்கும், மூத்த சகோதரர்கள் வளமுடன் வாழ்வதற்கும், எவ்வளவு கடினமான வழக்காக இருந்தாலும் அதில் வெற்றி பெறுவதற்கும் ஓதவேண்டிய பதிகம்*

பண்: குறிஞ்சி (1–92) இராகம்: அரிகாம்போதி

திருச்சிற்றம்பலம்

1. வாசி தீரவே, காசு நல்குவீர்;
மாசு இல் மிழலையீர்; ஏசல் இல்லையே

2. இறைவர் ஆயினீர்; மறைகொள் மிழலையீர்;
கறைகொள் காசினை, முறைமை நல்குமே

3. செய்ய மேனியீர்; மெய்கொள் மிழலையீர்;
பைகொள் அரவினீர்; உய்ய நல்குமே.

4. நீறு பூசினீர்; ஏறு அது ஏறினீர்;
கூறு மிழலையீர்; பேறும் அருளுமே

5. காமன் வேவ, ஓர் தூமக் கண்ணினீர்;
நாம மிழலையீர்; சேமம் நல்குமே

6. பிணிகொள் சடையினீர்; மணிகொள் மிடறினீர்;
அணிகொள் மிழலையீர்; பணிகொண்டு அருளுமே

7. மங்கை பங்கினீர்; துங்க மிழலையீர்;
கங்கை முடியினீர்; சங்கை தவிர்மினே

8. அரக்கன் நெரிதர, இரக்கம் எய்தினீர்;
பரக்கும் மிழலையீர்; கரக்கை தவிர்மினே.

9. அயனும் மாலுமாய் முயலும் முடியினீர்;
இயலும் மிழலையீர்; பயனும் அருளுமே.

10. பறிகொள் தலையினர், அறிவது அறிகிலார்;
வெறிகொள் மிழலையீர்; பிரிவத அரியதே.

11. காழிமா நகர் வாழி சம்பந்தன்,
வீழிமிழலை மேல். தாழும் மொழிகளே.

திருச்சிற்றம்பலம்

பன்னிரண்டாம் பாவம்

29. நாள்தோறும் உணவும் உறக்கமும் சீராகப் பெறுவதற்கும், வீண் செலவுகள் ஏற்படாமல் இருப்பதற்கும், மறுபிறப்பைப் தவிர்ப்பதற்கும், இறைவழிபாட்டில் ஈடுபாடு மிகுவதற்கும் ஓதவேண்டிய பதிகம்.

பண்: கௌசிகம் (3–49) இராகம்: பயிரவி

திருச்சிற்றம்பலம்

1. காதல் ஆகிக் கசிந்து, கண்ணீர் மல்கி,
ஓதுவர்தமை நன்னெறிக்கு உய்ப்பது;
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம், நமச்சி வாயவே.

2. நம்புவார் அவர் நாவின் நவிற்றிஞல்,
வம்பு நாள்மலர் வார்மது ஒப்பது;
செம்பொஞர் திலகம் உலகுக்கு எலாம்
நம்பன் நாமம் நமச்சி வாயவே.

3. நெக்குள் ஆர்வம் மிகப்பெருகி, நினைந்து
அக்கு மாலை கொடு அம்கையில் எண்ணுவார்,
தக்க வானவராத் தகுவிப்பது
நக்கன் நாமம் நமச்சி வாயவே.

4. இயமன் தூதரும் அஞ்சுவர்; இன்சொலால்
நயம் வந்து, ஓத வல்லார்தமை நண்ணிலுல்
நியமம்தான் நினைவார்க்கு இனியான், நெற்றி
நயனன், நாமம் நமச்சி வாயவே.

5. கொல்வாரேனும், குணம் பல நன்மைகள்
இல்லாரேனும், இயம்புவர் ஆயிடின்,
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பர் ஆல்;
நல்லார் நாமம் நமச்சி வாயவே.

6. மந்தரம் ஆன பாவங்கள் மேவிய
பந்தனை அவர் தாமும் பகர்வரேல்,
சிந்தும் வல்வினை; செல்வமும் மல்குமால்,
நந்தி நாமம் நமச்சி வாயவே.

7. நரகம் ஏழ்புக நாடினர் ஆயினும்,
உரைசெய் வாயினர் ஆயின், உருத்திரர்
விரவியே புகுவித்திடும் என்பரால்,
வரதன் நாமம் நமச்சி வாயவே.

8. இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல் மேல்
தலம்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி, வாய்மொழி செய்தவன் உய்வகை
நலம்கொள் நாமம் நமச்சி வாயவே.

9. போதன், போது அன கண்ணனும், அண்ணல்தன்
பாதம் தான் முடி நேடிய பண்பராய்;
யாதும் காண்பரிது ஆகி, அலந்தவர்
ஓதும் நாமம் நமச்சி வாயவே.

10. கஞ்சி மண்டையர், கையில்உண் கையர்கள்,
வெஞ்சொல் மிண்டர் விரவிலர் என்பரால்,
விஞ்சை அண்டர்கள் வேண்ட, அமுதுசெய்
நஞ்சு உண் கண்டன் நமச்சி வாயவே.

11. நந்தி நாமம் நமச்சிவாய எனும்
சந்தையால், தமிழ் ஞானசம்பந்தன் சொல்
சிந்தையால் மகிழ்ந்து ஏத்த வல்லார் எலாம்
பந்த பாசம் அறுக்கவல் லார்களே.

திருச்சிற்றம்பலம்

திறைவுறும்

